# நவீன அடிமைகள்

கயிலை திலகநாதன்



ஜனனி வெளியீடு
2017

யாழ்ப்பாணம் மத்திய
Jaffna Central College Library
நூலகம்
N932

# நவீன அடிமைகள்

(நான்கு நாடகங்கள்)

கயிலை திலகநாதன்

ஜனனி வெளியீடு
2017

**நவீன அடிமைகள்**

(நாடகத் தொகுதி)

ஆசிரியர் : கயிலை திலகநாதன்

முதற்பதிப்பு : ஆனி 2017

பதிப்புரிமை : ஆசிரியருக்கு

அட்டைப்பட வடிவமைப்பு :

வெளியீடு : ஜனனி வெளியீட்டகம்,
பொலிகண்டி, வல்வெட்டித்துறை

பக்கம் : 64

விலை : 200/-

அச்சாக்கம் : பரணீ அச்சகம், நெல்லியடி

ISBN- 978-955-7726-03-8

**சமர்ப்பணம்**

எனது நாடக உலகில் என்னுடன் உறவாடி பல
நாடகங்களில் இணைந்து பங்கேற்று
நாடகத்தையே தமது உயிர் மூச்சாகக் கொண்டு
வாழ்ந்து ஈழத்து தமிழ் நாடக உலகிற்கு
வளமூட்டிய மறைந்த கீழ்வரும்
அரங்கவியலாளர்கட்கு இந்நூல் மிகுந்த
மரியாதையுடனான சமர்ப்பணம்.

நல்லை சுந்தா
எஸ்.ரி.அரசையா
பிரான்சிஸ் ஜெனம்

## ஆசியுரை

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் விரிவுரையாளராகக் கடமையாற்றும் திரு. க. திலகநாதன் அவர்கள் பல்வேறு நூல்களை எழுதியுள்ளார். நூல்களை எழுதியுள்ளமை மாத்திரமன்றி நாடகமும் அரங்கியலும் பாடத்தினைக் கற்கும் மாணவர்களின் தேவை கருதி பல நாடக எழுத்துருக்களைப் பதிப்பித்துள்ளார். கல்வியியற் கல்லூரிக்கு வருகை தந்த காலம் தொடக்கம்(2003) பல நாடகங்களை அவர் மேடையேற்றியுள்ளார். அவர் நாடகமும் அரங்கியலில் சிறப்புத் தேர்ச்சியும் பெற்றும் முது மெய்யியல் மானிப்பட்டத்தையும் பெற்றுள்ளார். தேசிய கல்வி நிறுவகத்தால் தயாரிக்கப்படும் நாடகமும் அரங்கிய லும் பாடத்திற்கான அறிவுரைப்பு வழிகாட்டி நூல்களை எழுதிக் கொண்டிருக்கும் அதேவேளை பாடத்திட்டம் தயாரிக்கும் குழுவிலும் கடமையாற்றி வருகிறார். இவ்வாறு நாடகமும் அரங்கியலில் சிறப்பு தேரச்சி பெற்ற எமது கல்லூரி விரிவுரையாளர் க. திலகநாதனின் "நவீன அடிமைகள்" என்ற நூலிற்கு ஆசியுரை வழங்குவதில் பெருமையடைகின்றேன்.

கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டில் நாடகமும் அரங்கி யலும் பாடம் மிகுந்த செல்வாக்கை தற்போது செலுத்தி வருகிறது. அந்த அடிப்படையில் இந்நூலை குறிப்பிட்ட நாடகங்கள் மாணவரினால் நடித்து பயன்பெறக் கூடியது.

இந்நாடகங்களில் பெரும்பாலானவை கல்லூரி விழாக்களில் நடிக்கப்பட்டவையாகும். விரிவுரையாளர் திலகநாதனின் முயற்சிகள் பாராட்டத்தக்கன. அவர் மேன்மேலும் வளர வேண்டும். மாணவர்கட்கும் ஆசிரியர் கட்கும் பயன்தரும் வகையில் நூல்களை வெளியிட வேண்டும் என வாழ்த்துகிறேன்.

திரு. ச. அமிர்தலிங்கம்
பீடாதிபதி
யாழ்ப்பாணம் தேசிய கல்வியிற் கல்லூரி
கோப்பாய்
10.06.2017

# வாழ்த்துரை

நாடகக் கலை உலகக் கலைகளுள் முதன்மையானது. அழகியல் சார்ந்த, கல்வி சார்ந்த, சமூகம் சார்ந்த உயிர்ப்பான செயலாற்றுகைக்கு நாடக அரங்கச் செயற்பாடுகள் இன்று பெரிதும் பயன்படுகின்றன. ஒடுக்கப்பட்ட மக்களின் சமூக விடுதலைக்கான அரங்காகவும் நாடகக் கலை விருத்தி யடைந்து வருகின்றது. இவ்விருத்திக்களை பரிசோதித்து புத்தாக்கங்களை பல்பரிமாணங்களில் உருவாக்கி வரும் நாடகத்துறை சார் நிபுணராக இந்நூலாசிரியர் உயர் திரு க.திலகநாதன் அவர்கள் விளங்குகின்றார்.

எமது யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற்கல்லூரி நாடகத்துறை சார் சிரேஸ்ட விரிவுரையாளராக இருந்து பல நாடக நூல்களை எழுதி வெளியிட்டு, நடிப்பித்துக் காட்டி முகிழ்நிலை ஆசிரியர்களை சிறந்தநல்லாசிரியர்களாக உருவாக்கி வருபவர். நாடகத்துறை சார் கலைத்திட்ட உரு வாக்கம், புத்தாக்கங்கள், விழிப்புணர்வுகள், பரிசோதனை கள், விமர்சனங்கள் எனப் பல துறை ஆற்றலுடையயவராக திரு க. திலகநாதன் மிளிர்கின்றார். அவருடைய "நவீன அடிமைகள்" என்ற இந்த நூலுக்கு வாழ்த்துரை வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

நவீன அடிமைகள் நாடகத் தொகுதியில் உள்ள "நவீன அடிமைகள்" எனும் நாடகத் தொடக்கத்தில்,

"...நாங்கள் வென்று விட்டோம். வென்று விட்டோம்"

"... நாங்கள் தோற்றுப் போய் விட்டோம்"

"இனி இந்த நாட்டிலை என்ன நடக்கப் போகுதோ தெரியாது. நாங்கள் தோற்றுப் போய்விட்டோம்..."

"தெரிந்து செய்யல நாங்கள் அறிந்து செய்யல முடிஞ்சு போன வாழ்க்கையை மீட்க முடியல..."

என்ற ஆரம்பம் என்னை மனவெழுச்சிக்கு உள்ளாக்கி "ஐயோ என அழ வைக்கிறது..."

காலத்தின் கண்ணாடி கலைஞர்கள், கயிலை திலகநாதன் எனும் மாபெரும் நாடகக் கலைஞனின் "நவீன அடிமைகள்" நாடகத்தின் ஆரம்பம், தமிழின் எதிர்காலம், அடையாளம், கல்வி, பொருளாதாரம், அரசியல், கலாசாரம் என்பவை தொடர்பான மீள் சிந்தனைகளை ஆழமாக ஏற்படுத்துகின்றது. அத்துடன் இன்றும் கண்ணகிகள் இப்போதைக்கு என்ன வழி, மானெல் தீவு நாடு ஆகிய நாடகங்கள் மிகக் காத்திரமான பிரக்ஞையை வாசகர் உள்ளத்தில் ஏற்படுத்துகின்றது.

நூலாசிரியர் நாடக இலக்கியம், நாடகங்கள் சார்பான பல தேசிய விருதுகளைப் பெற்றவர். தொடர்ந்தும் தனது படைப்பாற்றலினூடாக பல நாடகங்களைத் தருவார். இவ்விடத்து அவரது எழுத்துக்கள், பதிப்புக்கள் பற்றியும் குறிப்பிட்டாக வேண்டும்.

அவரது படைப்புக்களாக,

- அரங்கு ஓர் அறிமுகம் - 1999(பேராசிரியர் கா.சிவத்தம்பி, பேராசிரியர் சி.மௌனகுரு ஆகியோருடன் இணைந்து எழுதப்பெற்றது)
- கோயில் அரங்கமரபு - 2008
- அரங்க கட்டுமானம் - 2012
- தோள்கொடுப்போம் - 2012
- அரங்கு - 2013
- பெரியோர் சொற் கேட்போம் - 2015
- தொடர்பாடல் -2015

- நவீன அடிமைகள் -2017

என்பனவும் பதிப்புக்களாக,

- கவிஞர் இ.முருகையன் அவர்களால் தழுவி மொழியாக்கம் செய்யப்பட்ட சோபோகிலிஸின் அன்றிகனி 2010
- வில்லியம் ஷேக்ஸ்பியரின் யூலிய சீசர் - 2012
- நாடக கலைஞர் நா.சுந்தரலிங்கத்தின் விழிப்பு - 2012
- நாடக கலைஞர் நா. சுந்தரலிங்கத்தின் அபசுரம் - 2012
- மகாகவி து.உருத்திரமூர்த்தியின் புதியதொரு வீடு-2015
- மகாகவி து.உருத்திரமூர்த்தியின் கோடை - 2016
- குழந்தை ம. சண்முகலிங்கத்தால் மொழியாக்கம் செய்யப்பட்ட கென்றிக் இப்சனின் ஒரு பாவையின் வீடு 2016 மற்றும் அவரால் எழுதப்பெற்ற கண்டறி யாத கதை 2017

போன்றவை. ஆசிரியர், மாணவர்களின் நன்மை கருதி பல நூல்களை பதிப்புச் செய்து வெளியிட்டுள்ளார். தனது ஜனனி வெளியீட்டகத்தால் பல நூல்களையும் வெளியிட்டுள்ளார்.

இத்தகைய முயற்சியும், அர்ப்பணிப்பும் சமூக நோக்கும் கொண்ட ஒருவர் மேலும் பல சேவைகளை ஆற்ற வேண்டும் அவரது முயற்சிகளைப் பாராட்டி வாழ்த்துகிறேன்.


“தேசமாண்ய இரத்தின தீப”<br>
கலாநிதி பா .தனபாலன்<br>
உபபீடாதிபதி (நிதி நிர்வாகம்)<br>
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி


11.06.2017

# முன்னுரை

ஆற்றுகை வெளியில் உயிர்பெறும் நாடக எழுத்துருக்கள் நான்கு கொண்ட தொகுதியாக நவீன அடிமைகள் இந்நூல் வெளியிடப்படுகிறது. இத்தொகுப்பில் பாடசாலைகள், கல்வியியற் கல்லூரிகள், மற்றும் பல இடங்களில் (தெருவெளிகளில்) ஆற்றுகை செய்யப்பட்ட நான்கு நாடகங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கின்றது. இந்நாடகங்கள் பல்வேறு காலப்பகுதிகளில் வேறுவேறு நோக்கங்களிற்காக எழுதப்பட்டவையாகும். எனது பல்கலைக்கழக சகபாடியும், கல்வியியற் கல்லூரி விரிவுரையாளருமான க.திலகநாதன் அவர்களால் எழுதப்பட்டவையாகும்.

ஆற்றுகை செய்யப்பட்ட இந்நாடகங்களை வெளியிடுதல் என்பது பல்வேறு வழிகளிலும் முக்கியத்துவமுடையதாகும். அதாவது ஒரு காலகட்டத்தின் அரங்க வரலாறுகளை அறிந்து கொள்வதற்கான முக்கியமான ஆவணங்களாக நாடக எழுத்துருக்கள் அமைந்துள்ளன. அவ்வகையில் இத்தொகுப்பு இலங்கைத்தமிழ் நாடக மரபின் பகுதி ஒன்றினை ஆவணப்படுத்தியுள்ளது எனலாம். அத்துடன் நாடகத் தயாரிப்பில் ஈடுபடுவோருக்கு இவை ஒரு நாடகத் தயாரிப்பிற்கான பிரதியாகவும் பயன்பெறும்.

இந்நாடகத் தொகுப்பின் ஆசிரியர் திரு. கை.திலகநாதன் எனது நீண்டகால நண்பர். யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் நாடகமும் அரங்கியல் கலைகளும் சிறப்புப் கற்கையின் சகபாடி. திலகநாதன் நாடகமும் அரங்கியலும்

சிறப்புக் கற்கையினை 1994 இல் நிறைவு செய்தவர். பேராசிரியர் கா.சிவத்தம்பியின் வழிகாட்டலின் கீழ், பல்லவர் சோழர் கால அரங்க மரபு தொடர்பாக இவர் மேற்கொண்ட ஆய்வே பின்பு 'கோயில் அரங்கு' எனும் தலைப்புடன் நூலாக வெளி வந்தது. தொடர்ந்தும் கல்வியிய லில் பட்டப்பின் டிப்ளோமா(2003) கற்கைநெறியினையும் 2008 இல் நாடகமும் அரங்கக் கலைகளிலும் முதகலை மாணிக் கற்கை ஆய்வில் அரங்கக் கட்டடக்கலை தொடர்பாக பேராசிரியர் சி. மௌனகுருவின் மேற்பார்வை யின் கீழ் ஆய்வு மேற்கொண்டிருந்தார்.

அரங்கின் ஆற்றுகை நிலையிலும் ஆய்வுத்தளங்களில் மட்டுமன்றி திலகநாதனின் பங்களிப்பு நாடகமும் அரங்கக் கலைகளும் கற்கை நெறியின் கற்றல் கற்பித்தல் தொடர்பான நிலைபேற்றிற்கு கடந்த 20 ஆண்டுகளாக பங்காற்றியுள்ளார். பாடவிதானிப்பு, பாடத்திட்டம் தயாரித்தல், மற்றும் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி-நூல் தயாரித்தல், வளவாளராக நாடகமும் அரங்கியலும் துறையின் வளர்ச்சிக்கு பணியாற்றிக் கொண்டிருக்கிறார். மிகவும் நெருக்கடியான காலகட்டங்களில் (விமானப்பயணம், கப்பல் பயணம், வாகன பாதுகாப்பு பேருந்துப்பயணம் (Convey) )கூட நாடகத் துறைக்கு அர்ப்பணிப்புடன் ஆற்றிய பணி குறிப்பிடத்தக்கது.

நவீன அடிமைகள் எனும் இத்தொகுப்பில் இடம்பெறும் நாடகங்கள் சமகாலத்து நிலைமைகளை பிரதிபலிப்பதாக காணப்படுகின்றன. நவீன அடிமைகள் எனும் நாடகம் கைத்தொலைபேசிப் பாவனையால் எவ்வாறு இளம் சந்ததியினர் சீரழிக்கப்படுகின்றனர் என்பதனையும் கணவனின் நம்பிக்கைத் துரோகம் பற்றி இன்றும் கண்ணகிகள் எனும் நாடகம் பேசுகிறது. உள்ளூர் வளங்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தாத பொருளாதார வளர்ச்சி பற்றிய விவாதம் பட்டிமன்ற சாயலில் நாடகமாக்கப் பட்டுள்ளது. மானல் தீவு நாடு என்று இந்நாடகத்திற்கு

தலைப்பிடப்பட்டுள்ளது.

இப்போதைக்கு என்ன வழி என்பது தெருவெளி நாடகமாகும். இது போதைவஸ்து, மது என்பன எவ்வாறு இலகுவாகக் கிடைக்கக் கூடிய பொருளாக மாறிவிட்டது என்றும் அதனால் ஏற்படும் பாதிப்புகளையும் விவரிக்கின்றது.

எளிமையான கதைப்பின்னல்களை கொண்ட இந்நாடகங்களில் பிரச்சினைகளையும் அதனோடு தொடர்பு பட்ட சம்பவங்களையும் முக்கியத்துவப்படுத்திப் பேசுவதன் மூலம் சமூகத்திற்கு விழிப்புணர்வூட்டுகிறது எனலாம்.

குறிப்பாக நாடகமும் அரங்கக் கல்விப்புலத்திற்கு இவரது பணி மேலும் தொடர வேண்டும். அரங்கு ஒரு கலைப்படைப்பாக கற்கை நெறியாக தொடர்ந்தும் நிலைபெறுவதற்கு திலகநாதன் தொடர்ந்தும் பங்காற்ற வேண்டும் என்பதே இத்துறை சார்ந்தோரின் எதிர் பார்ப்பாகும்.

திருமதி நவதர்ஷினி கருணாகரன்
சிரேஷ்ட விரிவுரையாளர்
நுண்கலைத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்
10.06.2017

# அணிந்துரை

தமிழில் தரமான வளமான நாடகப் பிரதிகளை நூல் வடிவமாகத் தரவல்ல ஒரு சிலரில் திரு க.திலகநாதன் தனித்துவமானவர். அவரது "நவீன அடிமைகள்" என்ற படைப்பு தமிழில் தமிழ்நாடக இலக்கிய வளத்தை மேலும் வளப்படுத்தும் புது வரவாகின்றது.

இந்நூலில் நான்கு நாடகப் பிரதிகள் உள்ளன. இவை ஒவ்வொன்றும் தனி மனித உளக்கோலங்களின் சமூகப் பண்புகளைச் சுட்டிக் காட்டுவனவாக உள்ளன. நாளாந்த வாழ்வியலில் எதிர் அனுபவங்களோடும் பிரச்சினை களோடும் வாழ்கின்ற மனிதர்களின் வாழ்வியலை சுட்டிக் காட்டுகின்றன.

இன்றைய இளம் தலைமுறையினர் நவீன தொலைத் தொடர்பு சாதனங்கள், மது, போதை போன்றவற்றினால் சீரழிகின்றனர் என்பதை 'நவீன அடிமைகள்' என்ற யதார்த்த நாடகமும், 'இப்போதைக்கு என்ன வழி?' என்ற தெருவெளி நாடகமும் சுட்டிக் காட்டுகின்றன. சமூகத்தில் அப்பாவித்தன மான பெண்கள் இருக்கும் வரை ஆண்வர்க்கத்தினர் ஏமாற்றுதல் இலகு என்பதனை 'இன்றும் கண்ணகிகள்' என்ற யதார்த்த நாடகம் வெளிப்படுத்தி நிற்கின்றது. நாட்டினை அபிவிருத்தி செய்கின்ற போது ஏற்படக்கூடிய சூழல் மாசடைதல் தொடர்பான பிரச்சினையை அரசியல் கட்சி உறுப்பினர்கள் விவாதிக்கின்ற உரையாடல் நாடகமாக

"மானெல் தீவு நாடு" என்ற நாடகம் எடுத்தியம்புகின்றது.

இவர் சிறந்த முயற்சியாளர். அமைதியான குணம் உடையவர். தனது இலக்கை அடைவதில் கண்ணுங் கருத்துமாய் இருப்பார். யாழ் பல்கலைக்கழகத்தில் நாடகமும் அரங்கியலும் என்ற பாடத்துறையினை சிறப்பு நெறியாகக் கற்றதுடன் கிழக்குப்பல்கலைக்கழகத்தில் முது மொய்யியல்மானிப் பட்டத்தினையும் நாடகத்துறையில் மேற் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இவர் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் விரிவுரையாளராகக் கடமையாற்றுவதால் கற்பித்தலில் ஈடுபடுவதுடன் நாடகங்களை தயாரித்தும் வருகிறார். மேலும் தயாரித்த நாடகங்களை நூல் வடிவில் வெளிக் கொணர்வது பாராட்டத்தக்து. இவர் இதுவரை நாடக ஆய்வு நூல்களையும், நாடக நூல்களையும், நாடகப் பிரதிகளையும் வெளியிட்டுள்ளார். இவர் தொடர்ந்தும் விடாமுயற்சியுடன் பல நூல்களை எழுதுவார் என நம்புகிறேன். இத்தகைய சிறப்புப் பொருந்திய திரு க. திலகநாதன் என்னுடைய மாணவன் எனக் கூறுவதில் பெருமையடைகின்றேன். திலகநாதனின் கலைத் தொடர்ச்சியும், ஆய்வுப் பகிர்வும், படைப்பாக்க வலுவும் மேலும் வளர்ச்சியுற வாழ்த்துகிறேன். இந்நூலின் வருகை காலத்தின் தேவை.

திருமதி சந்திரிக்கா தர்மரட்ணம்<br>
விரிவுரையாளர்(நாடகமும் அரங்கியலும்)<br>
கோப்பாய் ஆசிரியர் கலாசாலை<br>
கோப்பாய்.<br>
15.06.2017

## என்னுரை

நவீன அடிமைகள் எனும் நான்கு நாடகங்கள் கொண்ட நூல் வெளியிடுவதில் பெருமகிழ்வடைகின்றேன். இந்நாடகங்கள் யாவும் தேவை கருதி அவ்வப்போது எழுதப்பட்டவையாகும். அனைத்து மேடை நாடகங்களும் எமது கல்லூரியில் எமது கல்வியியற் கல்லூரி மாணவர்களால் மேடையேற்றம் கண்டவையாகும். "இப்போதைக்கு என்ன வழி" என்கின்ற தெருவெளி அரங்கு எனது ஆசிரிய நண்பர்களால் பருத்தித்துறை பிரதேச செயலக வேண்டுகோளிற்கு இணங்க எழுதி தயாரிக்கப்பட்டு வடமராட்சியின் வடக்கு பகுதிகளில் அவைக்காற்றுகை செய்யப்பட்ட நாடகமாகும். "மானெல் தீவு" எனும் உரையாடல் நாடகம் எமது கல்லூரியில் அரங்கேற்றம் செய்யப்பட்டு தேசிய ரீதியில் தெரிவு செய்யப்பட்டு கண்டி, பேராதனை கல்வியியற் கல்லூரியில் தேசிய சூழல் பாசறையில் மேடையேற்றம் காணப்பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

நாடகப் பிரதிகள் ஆற்றுகை செய்யப்படும் போதே முழுமை பெறுகின்றன என்பது பார்ப்போரின் பதிற்குறிகளிலிருந்து வெளிப்படுகின்றன. அத்தகையதொரு வரவேற்பை பெற்றனவே இந்த நாடகப் பிரதிகள். சமகாலப் பிரச்சினைகளைச் சுட்டுவனவாகவே இந்நாடகங்கள் எழுதப் பெற்றன. இந்நாடகங்கள் 2015, 2016 களில் எழுதப் பெற்றனவாகும். ஏற்கனவே இரண்டு சிறுவர் நாடகத்

தொகுதிகளையும்(தோள் கொடுப்போம், பெரியோர் சொற் கேட்போம்) ஒரு சமூக நாடகத் தொகுதியையும் (தொடர் பாடல்) வெளியிட்டுள்ளேன். இது நான்காவது நாடகத் தொகுதி நூலாகும்.

இந்நூல், நாடகத்தில் ஆர்வமுள்ளோரிடமும் கற்றல் - கற்பித்தற் செயற்பாட்டில் ஈடுபடும் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் அரங்கத்துறையில் ஆர்வமுள்ள அனைவருக்கும் துணை புரியும் என நம்புவோம்.

இந்நூலிற்கு ஆசியுரை வழங்கிய கல்லூரியின் பீடாதிபதி ச.அமிர்தலிங்கம் அவர்கட்கும், வாழ்த்துரை வழங்கிய உபபீடாதிபதி கலாநிதி பா.தனபாலன் அவர்கட்கும், அணிந்துரை வழங்கிய கோப்பாய் ஆசிரியர் கலாசாலை நாடகமும் அரங்கியலும் விரிவுரையாளர் திருமதி சந்திரிக்கா தர்மரட்ணம் அவர்கட்கும் முன்னுரை வழங்கிய யாழ் பல்கலைக்கழக நாடகமும் அரங்கியலும் சிரேஸ்ர விரிவுரையாரும் பல்கலைக்கழக சமகால நண்பியுமான திருமதி நவதர்சினி கருணாகரன் அவர்கட்கும் மனமார்ந்த நன்றிகள்.

குறிப்பாக எனது நூல்கள் பலவற்றை அச்சிட்டு வெளியிடும் எனது மாணவன் க.பரணீதரன் அவர்கட்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

நூலாசிரியர்
க.திலகநாதன்
புதுவளவு
பொலிகண்டி
வல்வெட்டித்துறை
28.06.2017
0776314167

**நவீன அடிமைகள்**

**இன்றும் கண்ணகிகள்**

**மானெல் தீவு நாடு**

**இப்போதைக்கு என்ன வழி**

# நவீன அடிமைகள்

## காட்சி I
(கயிறு இழுத்தல்)

தத்தரிகிட தித்தரிகிட தத்தரிகிட தத்தாம்
தத்தரிகிட தித்தரிகிட தத்தரிகிட தத்தாம்
தத்தரிகிட தித்தரிகிட தத்தரிகிட தத்தாம்
தத்தரிகிட தித்தரிகிட தத்தரிகிட தத்தாம்
தகஜொணு தாம் தகஜொணு தாம் தாம்

குரல் I : நாங்கள் வென்று விட்டோம் வென்று விட்டோம் வென்று விட்டோம்.

குரல் II : நாங்கள் தோற்றுப்போய் விட்டோம்

குரல் III : இனி இந்த நாட்டில் என்ன நடக்கப்போகுதோ தெரிய வில்லையே நாங்கள் தோற்றுப்போய் விட்டோம் நாங்கள் தோற்றுப் போய்விட்டோம்.

அனைவரும் அசையாது நிற்றல் (Still)

பாடல் : தெரிஞ்சு செய்யல நாங்க அறிஞ்சு செய்யல
முடிஞ்சு போன வாழ்க்கைய மீட்க முடியல - 02

பழைய பாசம் தேடிப் பார்த்தன் எங்கும் கிடைக்கல
எங்க வாழ்க்கை முடிஞ்சு போகுமோ இந்த நொடியில - 02

ஆசிரியர் : ஐயோ! என்னட்ட படிச்ச பிள்ளையள் இப்பிடி இந்தச் சின்ன வயசுல அநியாயமாய் போச்சுதுகளே என்னால இதைப் பார்க்க முடியேல்ல. என்னால இதைப் பார்க்க முடியேல்ல நான் போறன் நான் போறன்

உரைஞர் : எங்கட கலாச்சாரங்கள், பண்பாடுகள், விழுமியங்கள் எல்லாம் எங்கே போனது. இந்தச் சின்ன வயசில இவர்கள் சீரழிந்து விட்டனரே இதற்கு காரணம் என்ன? இவர்கள் யார்? இவர்கள் யார்? இதை நீங்கள் அறிவீர்களா நீங்கள் தான் அறிவீர்களா?

பாடல் : அறியாமையால் அழிந்து போன... வாலிபங்களே... இளசுகளே...

## காட்சி - II

றம்யா : ஏய் நான் ஓஎல் பாஸ் பண்ணினதால மாமா எனக்கு லண்டன்ல இருந்து ஐ போன் அனுப்பினவர்.

சஞ்சீவ் : ஏய் Super வாங்கோ எல்லாரும் Photo எடுப்பம்

(போன் பார்த்துக்கொண்டிருக்கும் போது ஆசிரியர் வரல்)

பவி : ஏய் ரீச்சர் வாறா

மாணவர்கள் : குட்மோர்னிங் ரீச்சர்

ஆசிரியர் : குட்மோர்னிங் பிள்ளையள் நீங்கள் ஓஎல் இல 9A, 8A எண்டு பெறுபேறு எடுத்திட்டு ஏஎல் சயன்ஸ் பாடத்தை தெரிவு செய்திருக்கிறீங்கள் நீங்கள் எல்லாரும் 3A எடுக்க என்னுடைய வாழ்த்துக்கள்.

மாணவர்கள் : தாங் யூ ரீச்சர்

ஆசிரியர் : ஓ கே பிள்ளையள் படியுங்கோ நான் போய்ட்டு வாறன்

## காட்சி – III

சிவரத்தினம் : கமலம் – கமலம்

கமலம் : ஓம் வாங்கப்பா இருங்கோ

சிவரத்தினம் : கூப்பிட்டு எவ்வளவு நேரம் இப்பத்தான் வாங்கோப்பா நோங்கோப்பா எண்டு கொண்டு வாறா

கமலம் : இருங்கோப்பா நான் ரீ போட்டுக்கொண்டு வாறன்.

சிவரத்தினம் : அதை விடு! நான் உன்னட்ட முக்கியமான விஷயம் ஒன்று சொல்லோணும்

கமலம் : என்னப்பா விஷயம் சொல்லுங்கோ

சிவரத்தினம் : என்ர பெடியன் ஓ எல் 9A எடுத்தவனல்ல.

கமலம் : ஓம் அதுக்கென்ன

சிவரத்தினம் : அவனுக்கு ஒரு ஐ போன் வாங்கிக் குடுக்கோணும்

கமலம் : என்னப்பா சொல்லிறியள் எங்கட கஷ்டத்துக்கு இதெல்லாம் தேவையே அப்பா?

தகப்பன் : போடி விசரி, இப்பத்தைய பெடியள் எல்லாமே ஒவ்வொரு போன் ஓட தானே திரியுதுகள் என்ட பெடியனும் வைச்சிருந்தா தானே எனக்கும் மரியாதை!

கமலம் : அதுக்கு நாங்கள் எங்கையப்பா காசுக்குப் போறது

தகப்பன் : ம்... பெட்டையின்ரை சங்கிலி இருக்குத் தானே... அதைக்கொண்டே வைச்சிட்டு எடுப்பம்

கமலம் : என்னப்பா சொல்லிறியள், ஒரே ஒரு பிள்ளைக்கு இருக்குறது ஒரு சங்கிலி அதையும் தந்திட்டு நாங்கள் என்ன செய்யுறது

சிவரத்தினம் : நீ இப்ப தாறியோ....நான் எடுக்கட்டோ..

கமலம் : இல்ல வேண்டாம்.. எடுக்காதீங்கப்பா

சிவரத்தினம் : போடி அங்கால (சங்கிலியை எடுத்துச் செல்லல்)

மகள் : அம்மா அழாதீங்கோம்மா... எழும்புங்கோம்மா..

## காட்சி – IV

றம்யா : ஹலோ நான் றம்யா கதைக்குறன் நீங்க யார் கதைக்கிறது oh... ரகுவா ஓகே நீங்கள் எங்க வேர்க் பண்றீங்க.. oh இது சரிவராது சொறி ரோங் நம்பர்.

றம்யா : ஹலோ நான் றம்யா கதைக்கிறன் oh..? கமலா oh நீங்க எங்க வேர்க் பண்றீங்க? oh அப்பிடியா சொறி ரோங் நம்பர்.

றம்யா : ஹலோ நான் றம்யா கதைக்குறன் நீங்க யார் கதைக்கிறது? oh... நதீஸா ஓகே நீங்க எங்க வேர்க் பண்றீங்க? ஓ சொறி ரோங் நம்பர்.

றம்யா : ஹலோ நான் றம்யா கதைக்குறன் நீங்க யார் கதைக்கிறது? oh அகிலகுமாரா ஓகே நீங்க எங்க வேர்க் பண்றீங்க? ஓ அப்பிடியா உங்க கடைல என்னென்ன பான்சி ஐரம்ஸ் இருக்கு oh... அப்பிடியா?..

(செல்லல்)

## காட்சி – V

(படித்துக்கொண்டிருத்தல்)

அண்ணன் – தங்கை சந்தோசமாக இருத்தல்

சிவம் : தம்பி... தம்பி...

சஞ்சீவ் : ஓம் என்னப்பா சொல்லுங்கோ

சிவம் : அப்பா பிள்ளைக்கு ஒரு போன் வாங்கினான் சரியோ பிடிச்சிருக்கோ எண்டு பார்

சஞ்சீவ : Ohh.. அப்பா இந்த போன் தான் எண்ட கிளாஸ்ல றம்யா எண்டு ஒருத்தியும் வச்சிருக்காள்

சிவம் : உனக்கு இது சரிதானா?

சஞ்சீவ் : ஓ... தாங் யூ அப்பா ஐ லவ் யூ அப்பா

மகள் : ஏனப்பா இவனுக்கு இந்தப் பெரிய போன்

சிவம் : நீ பொம்பிளைப்பிள்ளை உனக்கொண்டும் தெரியாது நீ உள்ளே போ...

சஞ்சீவ் : ஓகே அப்பா இதை நான் எண்ட பிரண்ட்ஸ்கு காட்டுறன்

சிவம் : இதெல்லாம் முக்கியம் இல்ல. அப்பாக்கு ஏஎல் ல 3A எடுத்துத் தரோணும்

சஞ்சீவ் : அந்தக் கவலைய விடுங்கோ. நான் போட்டு வாறன்

(கமலம் வரல்)

கமலம் : என்னப்பா இது பெரிய பெட்டி மாதிரிக் கிடக்குது

சிவம் : இவன் தம்பிக்கு ஒரு போன் வாங்கினான்.

கமலம் : அ... எவ்வளவப்பா காசு

சிவம் : 2 லட்சம்

கமலம் : என்ன லட்சமோ? என்னப்பா சொல்றியள். பிள்ளையின்ட சங்கிலிய வித்தா கூட இவ்வளவு காசு வராது. என்னன்டப்பா வாங்கினியள்

சிவம் : அ... லீசிங்கில எடுத்தனான்.

கமலம் : என்னப்பா சொல்றீயள் எங்கட கஷ்டத்துக்கு ஏன் லீசிங்கில போய் போன் எடுத்தனீயள் என்னண்டு இதை கட்டி முடிக்கிறது.

சிவம் : நான் ஆம்பிளை நான் உழைச்சுக் கட்டுவன் நீ உன்ட வேலைய பாத்துக்கொண்டு போ

கமலம் : கடவுளே சாப்பிடக்கூட வழியில்ல. இதுல இவர் லீசிங்கில போய் காசு எடுத்திட்டார். இதை நான் என்னண்டு கட்டி முடிக்கப்போறனோ தெரியேல்ல நீ தான் எங்களக் காப்பாத்தோணும்.

## காட்சி - VI

சஞ்சீவ் : டேய்.... அப்பா எனக்கு ஐ போன் வாங்கித் தந்தவரல்ல

பவி : ஓ.. சூப்பர் மச்சி வாடா செல்பி எடுப்பம்

சௌமி : டேய்! இது செமையா இருக்கு

காயு : டேய் ரீச்சர் வாறா

ஆசிரியர் : பிள்ளையள் நீங்கள் ஓஎல் அ நல்ல பெறுபேறு எடுத்தது பெரிய விஷயம் இல்ல, ஏஎல் 3A எடுக்கோணும் சஞ்சீவ் விளங்குதே?

சஞ்சீவ் : ஓம் ரீச்சர்

ஆசிரியர் : உங்கள பெர்ஸ்ட் ரேம் மார்க்ஸ் எல்லாம் திருத்திட்டன் வாசிக்குறன் கேளுங்கோ சஞ்சீவ் 28, பவித்திரன் 12 றம்யா 30, சௌமியன் 06 பிள்ளையள் உங்கட மார்க்ஸல கொஞ்சம் கூட எனக்குத் திருப்தியில்லை. இப்பவே இந்த மார்க்ஸ் என்டா பிறகென்ன. சஞ்சீவ் இங்கால வா. நீ இப்ப சரியான மாற்றம் மார்க்ஸ் எல்லாம் குறைவு படிப்பில அக்கறை இல்ல.

சஞ்சீவ் : அடுத்த முறை நல்ல மார்க்ஸ் எடுப்பன் ரீச்சர்.

ஆசிரியர் : பிள்ளையள் உங்களுக்கு ஒண்டு சொல்றன் நீங்கள் தேவையற்ற பழக்க வழக்கங்களுல ஈடுபடாமல் படிப்பில் உங்கட கவனத்த செலுத்துங்கோ அதுல தான் எங்கட எல்லாரிண்ட வாழ்க்கையும் தங்கியிருக்கு.

எல்லாரும் : இனி ஒழுங்காப் படிப்பம் ரீச்சர்

ஆசிரியர் : ஓ கே படியுங்கோ நான் வாறன்

எல்லாரும் : தாங் யூ ரீச்சர்

சஞ்சீவ் : டேய் வாடா பேஸ்புக் பாப்பம்.

## காட்சி - VII

சௌமியன் : டேய் மச்சான் நான் படிக்கேக்க அந்தக் கடையில் பெடியள் எல்லாம் எதோ வாங்குறவங்கள் நாங்களும் வாங்குவ மோடா

பவி : அ.. ஓமடா டேய் நீ போய் வாங்கிக்கொண்டு வாடா

சஞ்சீவ் : இந்தாடா மச்சி காசு (வாங்கச் செல்லல்)

சஞ்சீவ் : என்னடா இவன் இன்னும் காணல, எங்கேயும் சொல்லாம போய்ட்டானோ

பவித்ரன் : இவன் இப்பிடித்தான்டா டேய் வாறான் மச்சி. இஞ்ச கொண்டா

சௌமியன் : டேய் மச்சி சூப்பர்டா கொஞ்சம் தாடா (பெண் வரல்)

சஞ்சீவ் : டேய் மச்சி அவள் எனக்கு 3 ஆ தெரியுறாள்டா

பவி : டேய் அவள் எனக்கு 5 ஆ தெரியுறாள்டா

எல்லோரும் : அ... ஜலசா.. அ... ஜலசா... அ. ஜலசா (பெண் ஓடுதல்)

## காட்சி - VIII

கமலம் : தம்பி நில்லப்பு நீ இப்பஒரே ரியூசனால் பிந்தி பிந்தி வீட்டுக்கு வாறாய். ஏனப்பு ரியூசன்ல வாத்திமார் உன்னை மினக்கெடுத்துனமே?

சஞ் : அதெல்லாம் விடுங்கோ ரியூசன் காசு இப்ப கூடிட்டுது அடுத்த மாசத்தையும் சேர்த்துக் கட்டட்டாம்

கமலம் : எவ்வளவு

சஞ் : ஐயாயிரம்

அனோஜி : ஏனம்மா இவனுக்கு இவ்வளவு காசு

சஞ் : நீ பேசாம இரு தாறதெண்டா தாங்கோ இல்லாட்டி நான் படிக்கப்போகேல்ல

கமலம் : என்னட்ட அவ்வளவு காசு இல்லையே.... அ.. தம்பி இந்த மாச கடைக்காசு இவ்வளவு தான் இருக்கு இத முதல் கட்டு பிறகு பாப்பம்

சஞ் : மிச்சத்தை வேளைக்குத் தரப்பாருங்கோ. சொல்லிட்டன்

கமலம் : தம்பி சாப்பிட்டுப் போவன்

சஞ் : எனக்கு பசிக்கல்ல நான் வெளிய சாப்பிடுறன்

அனோஜி : ஏன் அம்மா இருக்கிற காசையும் குடுத்திட்டு என்ன செய்ய போறியள்

அம்மா : அவன் ஆம்பிளப்பிள்ள அவன் படிச்சுத் தானே எங்களப் பார்க்கோணும்

## காட்சி - IX

சஞ் : ஹாய் டார்லிங்.

மதுரா : ஹாய்

சஞ் : டார்லிங் நான் உங்களுக்கு ஒரு சேப்பிறைஸ் வச்சிருக்கன்

மதுரா : அ... உண்மையாவா? எங்க பாப்பம்

சஞ் : இந்தாங்க எப்படியிருக்கு

மது : ஏய்.... எனக்கு ரொம்ப பிடிச்சிருக்கு தாங் யூ.

சஞ் : ஓகே இதை எனக்குப் போட்டுக் காட்ட முடியுமா?

மது : ஓ... ஓகே எப்படியிருக்கு?

சஞ் : இது என்ட கையில் இருந்ததை விட உங்க கழுத்துல இருக்கும் போது தான் ரொம்ப தான் அழகா இருக்கு.

மது : ஓ... அப்படியா தாங் யூ

சஞ் : ஓ.கே எனக்கு கிளாஸ்க்கு ரைம் ஆச்சுது நான் உங்கள அப்புறம் மீட் பண்றன் பாய்... பாய்... பாய்.

மதுரா : பாய்... பாய்...இண்டைக்கு நல்ல வேட்டை தான் எப்படியும் ஒரு 50 வரும் இவன் நல்லா ஏமாந்துட்டான்.

மதுரா : எங்க இந்த விடுபயலை காணல நேரம் வேறு போகுது

பவி : ஹாய்...ஹாய்...

மது : ஹாய்...

பவி : நான் உங்களுக்கு ஒரு சேப்பிரைஸ் வைச்சிருக்கன்

மது : அப்பிடியா எங்க பாப்பம்

பவி : இந்தாங்க எப்படியிருக்கு? ஓ

மது : ஓ...சூப்பர் தாங் யூ.

பவி : ஓகே எனக்கு கிளாஸ்க்கு ரைம் ஆச்சுது பாய்..

மது : ஓகே பாய்..பாய்.. இவன் பேயன் நல்லா ஏமாந்துட்டான் இதுவும் ஒரு 50 வரும் வேட்டை தான் ம்... இவனுட்ட நிறைய வாங்க என்ன பண்ணலாம்...?ஓகே இண்டைக்கு என் பேர்த்டே பார்ட்டி எண்டு எல்லாரையும் கூப்பிடுவம்.

மது : ஹலோ நான் மதுரா கதைக்கிறன். சஞ்சீவா? இண்டைக்கு என்ட பேர்த்டே KFC க்கு வாங்க ஓகே பாய். ஹலோ நான் மதுரா கதைக்குறன் பவித்திரனா? today என்ட பேர்த்டே பாட்டி KFC க்கு வாங்க ஓ கே.

அடுத்து யாருக்கு கோல் பண்ணலாம் ஆ.ஹலோ சௌமியனா.. இண்டைக்கு என்ட பேர்த்டே பாட்டி KFC க்கு வாங்க ஓகே பாய்..

எல்லாரும் : ஹாய்...ஹாய்...

(மதுரா எல்லா பரிசுப்பொருட்களையும் எடுத்து ஏமாற்றிச் செல்லல்)

சஞ் : டேய் மச்சான் பில்லைக்கட்டு

சௌமியன் : டேய் காசு குடு. பணம் கொடுத்தல்.

பவி : டேய் நீ கட்டு பாய் (சஞ்சீவ் காசு கொடுத்தல்)

சிலையாக நிற்றல்

(போதைப்பொருள் பாவித்தல்)

பாடல் : அறியா மக்கள் இருளில் மடிவர்
பெருங்களத்தில் உள்ளோம் நாங்களே
நாங்க யாரென்றால் எமக்கும் தெரியாது
நீங்கள் யாரென்றால் அதுவும் புரியாது.

(பெண் வரல்)

சஞ் : ஹாய்

மது : ஹாய்

(இருவரும் சேர்ந்து செல்ல)

பவி : ஏய் நீ என்ன இவனோடா ஆ?

மது : என்ன? உன்னட்ட என்ன இருக்கு அவருட்ட பைக் இருக்கு காசிருக்கு. உன்னட்ட என்ன இருக்கு அ? நீ சரிப்பட்டு வரமாட்டாய் வாங்க டார்லிங்க நாங்க போவம்.

பவி : டேய் மச்சான் அவள் என்ன ஏமாத்திட்டாள்டா

சௌமி : விடுடா விடுடா அவள பழிவாங்குவன்டா

(மதுராவைத் துரத்தி கத்தியால் குத்துதல்)

மது : ஐயோ!!

## காட்சி - XI

சிவம் : கமலம்... கமலம்

கமலம் : வாங்கோப்பா.. என்னப்பா ஒரு மாதிரி வாறியள் உங்களுக்கு என்ன நடந்தது?

சிவம் : என்ன மன்னிச்சுடு கமலம் லீசிங் காசு கட்டேல்ல எங்கட வீட்டை பறிமுதல் செய்தீட்டாங்கள் நான் மருந்து குடிச்சிட்டன். நான் உங்கள நடுத்தெருவுக்கு கொண்டு வந்திட்டன் என்ன மன்னிச்சிடு

(தகப்பன் இறத்தல்)

கமலம் : என்னப்பா? ஏனப்பா இப்பிடி அவசரப்பட்டனியள் நான் அப்பவே படிச்சுப் படிச்சு சொன்னனே இப்பிடி அநியாயமா உயிர விட்டுடிட்டியளே... என்ர பிள்ளையளையும் தனிய விட்டுப் போட்டியளே

(கதறி அழல்)

அனோஜி : அப்பா...அப்பா

ஒப்பாரி வைத்தல்:

உன்ன போகவேணாணு சொன்னன் போக வேணாணு சொன்னன்
கடன் வாங்கி கடன் வாங்கியே அழிஞ்சு போனாயோ என்ர ராசா
அடிச்சு அடிச்சு என்ன துரும்பாக்கிப் போனாயோ
பிள்ளைகள் தனிய விட்டுப் போனாயோ என்ர ராசா

நான் என்ர பிள்ளையள நினைச்சமுதன் அந்தக்
கடன் வேண்டாத சந்தோசமான காலத்தை நினைச்சமுதன்
(துகப்பனை தூக்கிச் செல்லல் கமலம், அனோஜி சஞ்சீவ் கதறி அழல்)

## காட்சி - XII

றம்யா : என்ன இவர இன்னும் காணல காலமை 9.00 மணிக்கு வந்தன் 4.00 இன்னும் வரேல்ல. நான் என்ன பண்றது. வீட்டுக்கு திரும்பி போகவா... என்ன செய்யிறது

(தனியே நின்று கதைத்தல்)

கமலம் : தம்பி நில்லப்பு அப்பாவும் எங்கள விட்டுப்போட்டார் இனி நீதான் இந்தக் குடும்பத்தை பார்க்கோணும்
(சஞ்சீவ் தள்ளிச்செல்லல்)
தம்பி என்னடா நடந்தது உனக்கு நீ இப்ப முந்தி மாதிரி யார் கூடவும் கதைக்கிறதும் இல்ல பழகுறதும் இல்ல என்னடா நடந்தது உனக்கு?

சஞ் : என்ன தொடாதீங்கோம்மா... நான் எல்லாம் தெரியாம செஞ்சிட்டன் எல்லாமே முடிஞ்சு போச்சம்மா. என் மன்னிச்சிடுங்கோம்மா (இருவரும் அழுதல்)

பாடல் : தெரிஞ்சு செய்யல நாங்க அறிஞ்சு செய்யல
முடிஞ்சு போன வாழ்க்கைய மீட்க முடியல
போக வழியில்ல வழி சொல்ல முடியல
நினைச்ச தொன்னு நடந்ததொன்னு எதுவும் புரியல
பழைய பாசம் தேடிப் பார்த்தன் எங்கும் கிடைக்கல
சிரிப்ப மறந்து தவிக்கிறனே இந்த நிலையில்
சிறகொடிஞ்ச பறவை இருப்பது உயிர் இருக்கும் வரையில
என் வாழ்க்கை முடிஞ்சு போகுமோ இந்த இருட்டு அறையில்
(அறையில் வைத்து பூட்டுதல்)

## காட்சி - XIV

அனோஜி : அம்மா நான் ஸ்கூல் போட்டு வாறன்.

| | | |
|---|---|---|
| கமலம் | : | பிள்ளை அப்பாவும் எங்கள விட்டுட்டுப் போயிட்டார் அண்ணாவுக்கும் இப்பிடி நடந்திட்டு இனி நீதான் படிச்சு எங்கள காப்பாத்தோணும் கவனமா போட்டு வாம்மா |
| அனோஜி | : | சரியம்மா நான் போட்டு வாறன் (பாடசாலைக்கு புறப்படல்) என்ன இன்னும் பஸ்ஸ காணல school க்கு நேரம் போட்டுதே |
| பாடல் | : | தலைவாரிப் பூச்சூடி உன்னை (02)<br>உன்னை பாடசாலைக்கு போ<br>என்றாள் உன் அன்னை (02)<br>(அனோஜியை சில ஆண்கள் வானில் கடத்தல்) |
| அனோஜி | : | அம்மா... என்ன விடுங்கோ |

## காட்சி – XVI

| | | |
|---|---|---|
| கமலம் | : | என்ன ஸ்கூல் போன பிள்ளை நேரம் 4.00 மணி ஆகுது இன்னும் காணேல்ல நான் என்ன செய்யுறது (கதறி அழல்) |
| பாடல் | : | சிலை போல ஏனிங்கு நின்றாய் (02)<br>நீ சிந்தாத கண்ணீரை ஏன் சிந்தி நின்றாய் (02) |

சிலையாக நிற்றல்

| | | |
|---|---|---|
| உரைஞர் | : | இவ்வாறு இன்னும் எவ்வளவு குடும்பங்கள், சீரழிகின்றன. இவ்வாறு மது, போதைக்கும், தேவையற்ற தொடர் பாடல்கள், இணையத் தளங்களுக்கும் எமது மாணவர்கள் அடிமையாகி சீரழிந்து சின்னா பின்னமாகிக் கொண்டிருப்பதை இன்னும் மௌனித்துப் பார்த்துக் கொண்டிருப்பதா? சமூகமே விழித்தெழு இவ்வாறு சீரழிந்து கொண்டிருக்கும் சமூகத்தை சீர்ப்படுத்த நாம் எல்லோரும் ஒத்துழைப்பு வழங்குவோம் மாணவர் சமுதாயம் ஒன்றிணைந்து நல்ல சமுதாயத்தை உருவாக்குவோம். |

பாடல் :

பழமை மாறும் புதுமை வேண்டும் கோசமெல்லாம் போதும்.
பழமை விட்டு புதுமை வந்தால் துன்பங்கள் தான் மிஞ்சும்
காலம் மாறும் வழியில் நாமும் மாற வேண்டும்.
ஆனால்கவலை சொல்லும் வழிகள் விட்டு விலக வேண்டும் நாமும்
மேலை நாட்டு மோகம் மூடும் நன்மை எல்லாம் வேண்டாம்
பாதை தப்பும் வழிகள் பலவும் காட்டும் அவைகள் வேண்டாம்
இரக்கமற்ற செயல்கள் காட்டும் வழிகள் நமக்கு வேண்டாம்
இளைஞர் சக்தி இனிமையான அருவி போல வேண்டும். (02)

-திரை-

# இன்றும் கண்ணகிகள்

## காட்சி - I

ஓம் சக்தி ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்
ஓம் சக்தி ஓம் சக்தி ஓம் சக்தி ஓம் – 02

கௌதமரின் துணைவி அகலிகை
இந்திரனின் சூழ்ச்சியால் கயமையால்
கல்லாகி நின்றாள் – 02

பாண்டவரின் துணைவி பாஞ்சாலி
கௌரவரின் வஞ்சத்தால்
சூதிற் பணயம் என்பார் – 02

திருதாஷ்டரின் துணைவி காந்தாரி
தன் நாதனுக்காய்
"கணவனுக்காய் குருடாக என்பார" 02

ராமனின் துணைவி சீதை
தன் மணவாளனுக்காக நெருப்பில் தேடுவார் – 02

குரல் I : போதும் நிறுத்துங்கள் உங்கள் பொய்யான போற்றிகளை

குரல் II : போற்றிப் பாடிக் கொண்டே எப்படி எல்லாம்" கொடுமை நிகழ்ந்திருக்கிறது.

குரல் I : அந்தக் காலத்துல நடந்த கொடுமைகளைச் சொன்னது போதும் இந்தக் காலத்துல நடக்கிற கொடுமைகளைச் சொல்லுங்கோ

குரல் : ஓமோம் இந்தக் காலத்துல நடக்கிற கொடுமைகள் எவையப்பா?

## காட்சி – II

தான தானனே தானனனே
தான தானனே தானனனே 02

முரசறைந்தனர் முழவறைந்தனர்
நீல விதானித்து நித்திலப்பூ பந்தற்கீழ்
மணவாளக் கோலத்துடன் வந்தனர் கண்ணகி கோவலன்

மாசறு பொண்ணே வலம்புரி முத்தே
காசறு திரையே கரும்பே தேனே....
(தான தானனே தானனனே) 02

நிஷாந் : ஜோதி உங்கள நான் பார்த்த உடனேயே அந்தக் கணத்துலேயே முடிவு பண்ணிட்டன் நீங்க தான் என்ட மனைவி எண்டு நீங்க இப்ப எனக்குக் கிடைச்சிட்டிங்க எனக்கு சந்தோசத்துல கை கால் நிலத்துல நிற்குதில்ல.

ஜோதி : அப்படிச் சொல்லாதீங்கப்பா நீங்க எனக்கு கிடைச்சது தான் நான் செய்த மிகப்பெரிய தவமென்று நான் நினைக்கிறன்.

நிஷாந் : இல்லை நீங்க எனக்கு கிடைச்சது தான் நான் செய்த மிகப்பெரிய தவம் என்று நினைக்கிறன்.

ஜோதி : இந்தக் காலத்துல வேலையில்லாத பெண்ணை யாருமே வேண்டாமென்று தான் சொல்லுவினம் ஆனால் நீங்க ஒரு டொக்டர் என்னை...

நிஷாந் : என்ன? உங்கட வடிவுக்கும் கலருக்கும் வேலை என்ன வேலை சும்மா தந்தாலே பத்திரமா வச்சிருப்பன்.

ஜோதி : அது எல்லாம் உங்கட பெருந்தன்மை

நிஷாந் : அப்படிச் சொல்லாதீங்க உங்களின்ர அழகுக்கு எனக்கு வேலைக்கு போகவே விருப்பமில்லை இப்படியே உங்கள பார்த்துக்கிட்டே இருக்கனும் போல இருக்கு

ஜோதி : சரியப்பா நேரம் போகுது வேலைக்கு வெளிக்கிடுங்கோ நான் ரீ போட்டுக்கொண்டு வாறன்.

(சூ, சொக்ஸ்,ரை ஐ ஜோதி நிஷாந்துக்கு எடுத்துக்கொடுக்கிறாள்)

## காட்சி – III

பாக்கியம் : பிள்ளை...பிள்ளை

ஜோதி : யார் பாக்கியமக்காவே ஓம் வாங்கோ பாக்கியமக்கா

பாக்கியம் : என்ன பிள்ளை உன்ர புருஷன் எப்பிடி?

ஜோதி : அதை ஏன் கேக்கிறீங்கள் அக்கா அவருக்கு என்ன சரியாப் பிடிக்கும்

பாக்கியம் : இந்தக் காலத்துல பெடியள அவ்வளவு நல்லா நம்பக் கூடாது பிள்ளை

ஜோதி : அக்கா அப்படிச் சொல்லாதீங்கோ அவர் சரியான வித்தியாசம்

பாக்கியம் : இல்லைப் பிள்ளை இந்த நாட்டில இப்ப நடக்கிறதை சொல்றன் நீயும் வெளியுலகம் தெரியாத பிள்ளை அது தான்.

ஜோதி : அக்கா கவலையை விடுங்கோ அவர் என்ன அப்பிடிப் பார்த்துக் கொள்கிறார். எனக்கு என்ன சொல்றது எண்டே தெரியேல்லை அவர் என்ன அப்பிடிப் பார்க்கிறார்

பாக்கியம் : ஏதோ...! சின்னப்பிள்ளை பார்த்து நடந்துகொள் அவ்வளவு தான் சொல்லுவன் பிள்ள நான் போட்டு வாறன்

## காட்சி – IV

நிஷாந் வேலையால் வருதல் ஜோதி நிஷாத்திற்கு பணிவிடை செய்தல்

நிஷாந் : ஜோதி.... ஜோதிக்குட்டி எனக்கு வேலைக்குப் போகப் பிடிக்கேல்லை.

ஜோதி : என்ன சொல்லுறீங்களப்பா?

நிஷாந் : உங்கள விட்டுட்டு வேலைக்குப் போக எனக்கு விருப்பமில்லை

ஜோதி : சரி வாங்கோ இரண்டு பேரும் கோயிலுக்குப் போட்டு வருவோம்

(தொலைபேசி அழைப்பு வரல்)

நிஷாந் : ஜோதி...ஜோதி எனக்கு கொழும்பு ஒரு மீற்றிங் எண்டு இப்ப தான் போன் வந்தது.

ஜோதி : என்னப்பா சொல்றீங்கள்

நிஷாந் : ஓமப்பா எனக்கும் ஒன்டுமா விளங்கேல்லை

ஜோதி : முக்கிய வேலையோ?

நிஷாந் : ம்....என்ன செய்யுறது போய்த் தான் ஆகனும்.

ஜோதி : சரி போக ஒரு நாள் வர ஒரு நாள் இரண்டு நாள் தானே போட்டு வாங்கோ.

நிஷாந் : என்ன சொல்றாய் ஜோதி ஒரு நாள் ஒரு செக்கன் கூட என்னால உன்னப் பார்க்காம இருக்க முடியாது 2 நாள் எப்பிடி இருக்கப்போறனோ தெரியேல்லை

ஜோதி : பயப்படாதீங்கப்பா பக்கத்து வீட்டுப் பாக்கியக்கா நல்லவா அவா எனக்குத் துணையாக இருப்பா சரி நான் உடுப் பெல்லாம் எடுத்து வைக்கிறன்.

நிஷாந் : ம்...நானும் பைல்ஸ் எடுத்து வைக்கவேணும்

(நிஷாந் கொழும்பிற்கு வரல்)

## மாதவி நடனம்

தகதிமி தகதிமி தகதிமி - 02

யாழும் குரலும் சீரும் மிடறும்
தாழ் குரல் தண்ணுமை ஆடலொடு இவற்றின்
இசைந்த பாடல் இசையுடன் படுத்து
வரிக்கும் ஆடற்கும் உரிப்பொருள் இயக்கி
தேசிகத் திருவின் ஓசை கடைப்பிடித்து
தேசிக திருவின் ஓசை எல்லாம்
ஆசின்று உணர்ந்த அறிவினன் ஆகிக்
கவியது குறிப்பும் ஆடல் தொகுதியும்

## காட்சி - V

றம்யா : ஹலோ நைஸ் டு மீற் யூ நிஷாந்.

நிஷாந் : யெஸ் ஐ ஆம் நிஷாந்.

றம்யா : ஐ ஆம் றம்யா உங்கள பார்த்ததுல எனக்கு நல்ல சந்தோஷம்

நிஷாந் : எனக்கும் அப்பிடித்தான்

றம்யா : ஓகே உங்கட பயணம் எல்லாம் எப்பிடிப் போச்சு

நிஷாந் : ஓகே நோ புறொப்ளம்

றம்யா : ஓகே வாங்கோ மீட்டிங் போவம்

## காட்சி – VI

(ஜோதி கணவனைக் காணாமல் கலங்கி நிற்றல்)

ஜோதி : ஒரு வேளை போன்க்கு சார்ஜ் இல்லையோ ஏன் இன்னும் கோல் எடுக்கல ஒரு நாளைக்கு ஒருக்கா கூட கதைக்காம இருக்கமாட்டாரே இப்ப ஏன் போன் எடுக்கல அவருக்கு ஏதும் ஆனதோ? கொழும்புக்கு போறதா சொன்னார் எங்க மீட்டிங் என்டும் கேக்கல இப்ப நான் என்ன செய்யுறது கடவுளே நீதான் காப்பாத்த வேணும்.

(கூட்டம் முடிந்தவுடன் நடனத்தில் ஒருமித்து ஆடுதல்)

## காட்சி –VI

(ஜோதி கணவனை எதிர்பார்த்து வாசலில் நிற்றல்)

ஜோதி : அங்க போனதுல இருந்து ஒரு கோல் கூட இல்ல அவர் டிஸ்பென்சறியும் மூடியாச்சு. இதை கேள்விப்பட்டா தாங்க மாட்டாரே என்ன செய்யுறது. என்ன செய்யுறார். ஒழுங்கா சாப்பிட்டாரோ கடவுளே ஏன் இப்பிடி சோதிக்கிறாய்

(பாக்கியம் கனகம் கதைத்தல்)

பாக்கியம் : கனகண்ணோ அண்ணே கனகண்ணே ஒரு கதை கேட்டியளே

கனகம் : என்னக்கா

பாக்கியம் : இந்த ஜோதின்ட புருஷன் கொழும்புக்குப் போய் 3 மாதம் இன்னும் வரேல்லை

கனகம் : அதை விடுங்கோக்கா.. அவன் கொழும்பில வேற கலியாணம் செய்துட்டான் இது தான் உண்மை

பாக்கியம் : எனக்குத் தெரியாது நான் இந்த உந்த ஊர் வம்புக்கு ஒண்டும் போறேல்லை. நான் உங்களுக்கு ஒன்டும் சொல்லேல்லை போட்டு வாறன்.

கனகம் : பாக்கியக்கா சொன்னா சரியாத்தான் இருக்கும் இவன் கொழும்புல வேறகலியாணம் செய்துட்டான் இதை எல்லாருக்கும் சொல்லவேணும் இல்லாட்டி எனக்கு நித்திரை வராது.

(வேறு ஒரு பக்கத்தில்)

றம்யா : நிஷாந் நீங்க சொல்லி இருக்கிறீங்க ஜஃப்னா தான் நீங்க இருக்கிறீங்கன்னு அங்க நல்ல நல்ல ப்ளேஸ் இருக்குனு அங்க அப்பிடி என்னல்லாம் இருக்கு.

நிஷாந் : ஓ..யெஸ் ஜஃப்னா கோட்டை இருக்கு நல்லூர் இருக்கு, அன்ட் எல்லோரும் என்ஜோய் பண்ணக்கூடிய கசூரினா பீஜ் இருக்கு

றம்யா : ஓ . . . நிஷாந் நான் உங்க கிட்ட ஒண்டு சொல்லணும்

நிஷாந் : ஓம் சொல்லுங்கோ என்ன

றம்யா : நிஷாந் நான் பிறெக்னன்ற்றா இருக்கிறன்

நிஷாந் : என்ன?

றம்யா : ஓம் இதுல எனக்கு சந்தோசம் இருந்தாலும் ஒரு கவலை நான் கொழும்பில வாழ்ந்தாலும் தமிழ் கலாச்சாரத்தை மதிக்கிற பொண்ணு ஒருவனுக்கு ஒருத்தி என்றது எனக்கு றொம்ப பிடிக்கும் அதனால் சொல்லுங்கோ நிஷாந் நம்மட வெடிங் அ எப்ப வைச்சிக்கலாம் யார் யாரைக் கூப்பிடலாம்.

நிஷாந் : ஆ . . . எனக்கு கொஞ்சம் தலைவலியாய் இருக்கு இதைப் பற்றி நாளைக்குக் கதைப்பம்

றம்யா : நிஷாந் . . . நிஷாந் . . . .

### சிலையாக சிற்றல்

பாடல் : பாஞ்சாலி மானம் காத்திட கண்ணன்
பாரதக் கதையிலே பக்கமாய் வந்தான்

ஆண்கள் வேட்டையில் அகப்பட்ட பெண் இவள்
துயரினைத் துடைக்க எவர் இங்கு வருவார்

சீதனம் சீர்வரிசையென்று பாவி இவன் வகை தொகையாய்
வாங்கிய முன் மணம் முடித்த நாளென்றே
மனையாளைத் துரத்திட
மங்கை இவள் கண்ட கனவெல்லாம் கருகிப் போனதையா

படிப்புண்டு பண்புண்டு உழைப்புண்டு
உத்தியோகமும் தானுண்டு தாங்கிய
விழிகளும் எதிர்ப்பார்ப்பும் இங்கே தேங்கியிருக்க காரணம் யாது
பாவம் இவள் வாழ்க்கையில் கூடவே வறுமையும்
தானுண்டு என்பதால்

உரை : பாவம் பாவம் அறியாத வயசு யார் பெற்ற பிள்ளையோ
அநியாயமாய்ப்போச்சு
இந்தக் காலத்திலை யாரை நம்புறது
இளமை முதுமை இல்லை வயது கணக்கு இல்லை
உறவில் உண்மை இல்லை நாறிக்கிடக்குது
நம் சமுதாயம்

குரல் II : ஓம் நாறிக்கிடக்குது நம் சமுதாயம்

(எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி இருந்தது எம் நாடு என்னும் பாடல் பாடப்படும்)

## காட்சி - VIII

ஜோதி : கடவுளே நான் உன்னில தான் நம்பிக்கையா இருக்குறன் அவர் இல்லாம நான் எப்படி வாழுறது. ஒரு நாள் கூட என்னைப் பார்க்காம இருக்க மாட்டாரே. அங்க போனதுல இருந்து ஒரு நாள் கூட என்னோட கதைக்கேல்லை.(ஜோதி அழுது கொண்டிருக்கையிலே நிஷாந் வருதல்)

நிஷாந் : ஜோதி....ஜோதி.....ஜோதி.

ஜோதி : வாங்கோப்பா வாங்கோப்பா சரியா வாடிப்போட்டியள் நான் கும்பிட்ட கடவுள் என்னைக் கைவிடேல்லை.

நிஷாந் : என்னை மன்னிச்சிடு ஜோதி நான் உன்னை ஏமாத்தி இவ்வளவு நாளும் கொழும்பில இருந்திட்டன் இதுக்குப் பலனா என்ட....

ஜோதி : அதை விடுங்கோப்பா முதல்ல வந்து சாப்பிடுங்கோ

நிஷாந் : இல்லை ஜோதி நான் உன்னைக் கஷ்டப்படுத்திப்போட்டன்

ஜோதி : அப்படிச் சொல்லாதீங்க பாக்கியக்கா கூப்பிடுறா வாற.

பாக்கியம் : பிள்ளை.....பிள்ளை ஜோதி

ஜோதி : பாக்கியக்கா வாங்கோ

பாக்கியம் : என்ன பிள்ளை உன்ட புருஷன் வந்துட்டார் போல ஒரே சத்தமாக்கிடக்கு

ஜோதி : ஓம் இப்ப தான்
அவருக்கு கொழும்பில போனதுல இருந்து ஒரே வருத்தம் அதான் அவர் வரேல்லை

பாக்கியம் : அது சரி உண்ட புருஷன் கொழும்பி....

ஜோதி : பாக்கியக்கா எனக்கு உள்ள நிறைய வேலை இருக்கு அவருக்கு சாப்பாடும் குடுக்கோணும்

பாக்கியம் : அப்ப நான் போட்டு வாறன்.

ஜோதி : இந்தாங்கோப்பா இதைக் கொண்டு போய் பாங்கிலை வச்சிட்டு சின்ன ஒரு டிஸ்பென்சறி ஆரம்பியுங்கோ

நிஷாந் : இல்லை வேண்டாம் ஜோதி உனக்கு நான் செய்த கொடுமைக்கு

ஜோதி : இல்லையப்பா அப்படியெல்லாம் சொல்லாதீங்கோ இதைப் பிடியுங்கோ

நிஷாந் : என்னை மன்னிச்சிடு ஜோதி சரி நான் போட்டு வாறன்
(கடவுளை வணங்கல், வெளியே சத்தம் கேட்டல், அச்சிடன்ட்)

நிஷாந் : ஜோதி.....

ஜோதி : என்னப்பா

பாடல் :

மாடுண்டு கன்றுண்டு என
மகிழ்வதெல்லாம் கேடில்லைஎன்று கேட்டு
விடு கேள் மனமே

(பாக்கியம் ஓடி வந்து வெள்ளைச் சாறியை ஜோதிக்குப் போர்த்தல்)

எடுத்துரைஞர் I : இவர்கள் எப்பொழுது மாறுவார்கள்.

எடுத்துரைஞர் II : அன்று கண்ணகி கோவலன் இன்று ஜோதி, நிஷாந்.....

எத்துரைஞர் I : இவர்கள் எப்பொழுது மாறுவார்கள்

எழுத்துரைஞர் II : இவர்கள் மாற வேண்டும்

எடுத்துரைஞர் I : ஓமோம் இவர்கள் மாற வேண்டும்

**முடிவு**

ஓங்கி எழுந்தது செந்தீ எட்டுத்திசையும் பரவும் செந்தீ
தீங்குகள் எட்டும் செந்தீ சுட்டெரிக்கும் செந்தீ 02
(ஆ...ஆ....)

புறப்படுவோம் புதிய நூற்றாண்டை நோக்கி
புதுவாழ்வுக்காக கைகளை ஒன்றிணைத்து
ஒத்துழைப்புக் கொடுத்திடுவோம்
எமது குரல்களையும் கைகளையும் நசுக்காது
உலகைக் காக்கும் திறனை நாங்கள் இணைந்து
ஒன்று சேர்ந்து உருவாக்குவோம்.

# மானெல் தீவு நாடு

(உரையாடல் நாடகம்)

திரைவிலக:

அரசியல் கட்சி உறுப்பினர்கள் நாட்டின் தேர்தல் ஏற்பாடுகளில் மூழ்கி உள்ளனர். அவர்களிற்கான பாடல்

பாடல் - நாட்டை ஆளும் தேசப்பற்றினால்
முக்கி முக்கியே முயலுகிறார்கள்
முக்கியமான நற்பணி இதுவென
முக்கி முக்கியே முயலுகிறார்கள்
தேசம் எங்கும் செல்வம் பெருகவே
பற்றுப் பற்றெனக் கூடுகிறார்கள்
தானனானே தானனானே தானனனானே

உரைஞர் 1, 2, 3- இந்தத்தீவு எங்கள் இந்தத்தீவை செழிப்பாக்குவோம்

உரைஞர் 1 - இந்தத்தீவு இந்து சமுத்திரத்தின் சொத்து. பரப்பளவோ 10000 சதுரகிலோமீற்றர்

உரைஞர் 2 - சனத்தொகை 2015 இல் 2 பில்லியன். இதன் தலைநகர் ஸ்ரீரம்யா ஆகும்

உரைஞர் 3 - தீவில் நடந்த தேர்தலில் கூட்டுக்கட்சிகள் வெற்றி பெற்றன.

உரைஞர் 1 - எதிர்க்கட்சியும் உருவானது

ஆளும் கட்சித் தலைவர் - இந்தத் தீவு எங்களது, எங்கள், தீவின் பெருமையை உலகெங்கும் பறை சாற்றுவோம்.

(பாடலுக்கு மக்கள் நடனமாடுவர்)

பாடல் - மானெல் தீவு எழில் சூழும் நாடு
மானெல் தீவு எழில் சூழும் நாடு சங்குகள்
முழங்க முத்தெறிந்திடும் கடற்கரையில்
நங்கையர் நடந்தவை உரைத்திடும்
சதங்கை ஒலி மானெல் தீவு எழில் சூழும்
நாடு மானெல் தீவு எழில் சூழும் நாடு
லாலா லல்லால லாலலா லாலா லல்லால லாலலா
லாலா லல்லால லாலவா லாலல லாலல லாலல லா
ஆறு நடந்து திரிந்து வயல்கள் அடைந்து
கதிர்கள் நிறைந்திட வான் ஏறி உயர்ந்த
மலைகளுமுண்டு சிகரங்கள் உண்டு
நீர்வீழ்ச்சியும் ஓடையும் அருவிகளுமுண்டு
காடுமுண்டு தோட்டமுண்டு தென்னை
தோப்புமுண்டு பசும் புல் வெளியும் உண்டு
(ஆடுவோர் நிலையாக நிற்க)

உரைஞர் 1 - குறிஞ்சி, முல்லை, நெய்தல், மருதம், பாலை என ஐவகை நிலங்களும் செழிப்பான இந்த நாட்டில் கலை, கல்வி, கலாசாரம், சமய ஒழுக்கம் எல்லாம் நிறைந்துள்ளது.

பாடல் - கற்க கசடற கற்றவை கற்றபின்
நிற்க அதற்குத் தக
அறம் செய்ய விரும்பு
ஆறுவது சினம்
ஆலயம் தொழுவது சாலவும் நன்று
ஆ.....ஆ.....ஆ......ஆ.....ஆ.....
மானெல்தீவு நாடு எழில் சூழும் நாடு

மானெல்தீவு நாடு எழில் சூழும் நாடு
லாலா லல்லால லாலலா (2)

உரைஞர் 1 - ஆம் எம் நாடு வானுயர்ந்த சிகரங்களும் நீர் வீழ்ச்சியும் ஓடைகளும் அருவிகளும் நிறைந்த நாடு.

உரைஞர் 2 - பசுமையான வனப் பகுதி, புலிகள், சிறுத்தைகள், யானைகள், கரடிகள், மான்கள், மரைகள் வாழும் காடு.

உரைஞர் 3 - பல்லாயிரக்கணக்கான சிறிய பெரிய நீரோட்டங்களையும் காணலாம்.

உரைஞர் 1 - குமுது நதி இந்து சமுத்திரத்தை ஊடறுத்துப் பாய்கிறது.

உரைஞர் 2 - நதியின் இருமருங்கிலும் எம் தலைநகர் அமைந்துள்ளது.

உரைஞர் 3 - அது மட்டுமா கரையோரச் சமவெளிகள், தோட்டங்கள் தென்னந் தோப்புக்களும் நிறைந்து காணப்படுகின்றன.

உரைஞர் 2 - பசுமாடுகள் மானெல் தீவு வாசிகளின் பொருளாதாரத்திற்கு வலுச் சேர்க்கின்றன.

உரைஞர் 1 - கண்டல் வனப்பகுதி மீன் வளம் பெருகக் காரணமாக உள்ளது.

உரைஞர் 3 - மானெல்தீவு வாசிகளின் கடற்றொழில் உற்பத்திகள் உலகெங்கும் பிரசித்தமானவை.

**தலைவர்**

அன்பு மக்களே எங்கள் தீவின் வளர்ச்சிக்காக 10 பில்லியன் அமெரிக்க டொலர் உதவி உலக வங்கியால் வழங்கப்படுகிறது.

**உலக வங்கிப்பிரதிநிதி - (எல் - பினான்ஸ்)**

அனைவருக்கும் வணக்கம். 10பில்லியன் 45 டொலர் தொகை தங்கள் நாட்டின் அபிவிருத்திக்காக எம்மால் குறித் தொதுக்கப்பட்டு தற்போது ஆளும் கட்சியிடம் ஒப்படைக்கப்படுகிறது. ஒதுக்கப்பட்டிருக்கும் நிதியை சரியான முறையில் நீங்கள் பயன் படுத்திக்கொள்ள வேண்டும். இந்த நிதி நாட்டின் வளர்ச்சிக்காக அபிவிருத்திக்காக செலவிடப்பட வேண்டும். மக்களின் நலன் கருத்திற் கொள்ளப்பட்டு செயற்றிட்டங்கள் நிறைவேற்றப் படல் வேண்டும். நிறை வேற்றப்படும் நாட்டை அபிவிருத்திப் பாதையில் இட்டுச்செல்ல வேண்டும்.

**நீதிமன்ற உரைபொறுப்பாளர்**

தற்போது உலக வங்கி பிரதிநிதி எல் பினான்ஸ் அவர்கள் ஆளும் (கட்டளை) கட்சித்தலைவனிடம் பணத்தை ஒப்படைத்து இருவரும் ஒப்பமிடுவர்.

**எல் - பினான்ஸ்**

முக்கியமாக நீங்கள் செய்ய வேண்டிய செயற்றிட்டங்கள் இவையாகும்.

1. சுற்றுலாக் கைத்தொழிலை உருவாக்கும் நோக்கில் ஐந்து நட்சத்திர ஓட்டல்கள் 10 அமைத்தல்.
2. கரையோரச் சம வெளியில் 2,580 ஹக்டேயர் பிரதேசத்தில் செய்கை மேற்கொள்ளல்.
3. மத்திய மலை நாட்டில் உள்ள "நில் குமுது" நீரணை மூலம் மின் உற்பத்தி செய்தல்
4. அதிவேகப் பாதை அமைத்தல்.
5. கொல்ப் விளையாட்டுத் திடல் அமைத்தல்
6. மத்திய மலைநாட்டில் ஸ்ரோ பெரிப்பழச் செய்கை ஆரம்பித்தல் என்பனவாகும்.

ஆகவே பொருத்தமானவர்களிடம் செயற்றிட்டங்களை வழங்கி நாட்டை முன்னேற்றி நல்வழிப்பாதையில் கொண்டு செல்லல் தங்களின் பணியாகும். இச் செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்படும் போது உலக வங்கி உறுப்பினர்கள் அவ்வப்போது பார்வையிட்டுக் கொள்வார்கள்.

**ஆளும் கட்சித் தலைவர்**

தங்கள் வருகைக்கும் உதவிக்கும் மானெல் தீவு மக்கள் பெரிதும் நன்றியாக இருப்பர். நீதிபதி அவர்களே, எம் அணியினரே எதிர்க்கட்சியினரே செயற்றிட்டங்களை பொறுப்பேற்கவுள்ளவர்களே, அனைவருக்கும் வணக்கம். தற்போது அனைவர் முன்னணியிலும் செயற்றிட்டங்களைப் பொறுப்பேற்க உள்ளவர்கள் கருத்தினை முன்வைப்பார்கள். முதலில் எமது

கரும்பு, மதுபானம், பழச்செய்கை தொடர்பான கைத்தொழிற் பணிகள் சங்கம் சார்பாக கருத்துரைக்கும் கே.சூர்.அவர்கள் பேசுவார். அவர்களின் கருத்தினை எல்லோரும் செவிமடுப்போம்.

**கே. சூர்**

அனைவருக்கும் வணக்கம் (விழிப்பு) எமது நாட்டில் தற்போது நாம் எதிர்நோக்கிவரும் மிகப்பிரதானமான பிரச்சினைகளில் சூழல் மாசடைதலும் ஒன்றாகும்.

நாம் எமக்குக் கிடைத்துள்ள நிதியினை உபயோகமான முறையில் பயன்படுத்த வேண்டியது அவசியமானதாகும். எமக்கு நிதியினை வழங்குவோர் நாம் அதனைச் சரியான முறையில் பயன்படுத்துகிறோமா என்பதனை உற்றுநோக்கிப் பார்த்த வண்ணம் உள்ளார்கள்.

நாம் எமக்குக் கிடைத்துள்ள பணத்தை வைத்து கரையோரச் சமவெளிகளில் 2500 கெக்டயர் அளவிலான நிலப்பரப்பில் ஓர் கரும்புத் தொழிற்சாலையை நிறுவ உள்ளோம். இதன் மூலமாக ஏராளமான வேலை வாய்ப்புக்களை உருவாக்கி வேலையில்லாப் பிரச்சினையினைக் குறைக்க முடியும்.

எமது கரும்புத் தொழிற்சாலையானது சிறப்பாக செயற்படும் பட்சத்தில் எம்மால் தரமான சீனியினை உற்பத்தி செய்து அதனை நியாயவிலையில் சந்தைப்படுத்த முடியும்

எமது கரும்புச் செய்கைக்கு பசளையாக கூட்டுப்பசளை முறை யினைக் கையாளவும் உத்தேசித்துள்ளோம். ஏனெனில் அவ்வாறு செய்யும் பொழுது எமது சுற்றாடலில் காணப்படும் இயற்கைக் கழிவுகளினை பசளையாகவும் கூட்டெரு செய்யவும் பயன்படுத்திக் கொள்ளலாம். இதனால் எமது சுற்றாடல் அழகாகவும் அமையும்.

கரும்புத் தொழிற்சாலை மூலமாக மதுசார உற்பத்தியினையும் பெருக்கிக் கொள்ளலாம். தற்போது அநேகமான நாடுகளில் அதிகளவு இலாபத்தினைப் பெற்றுத்தரும் துறையாக இது மாறியுள்ளது. நாமும் இதன் மூலமாகப் பொருளாதார முன்னேற்றத்தினை அடையமுடியும்.

அடுத்து மத்தியமலைநாட்டில் ஸ்ரோபரி பயிர்ச்செய்கையினை வளர்த்தல் தற்போது அல்லது பயிர்ச்செய்கை நிலங்கள் குறைந்து

போனமையினாலேயே மழையின்மை, ஒட்சிசன் அளவு குறைவடைதல், சூழல் வெப்பமடைதல் போன்ற சுற்றாடல் பிரச்சினைகளை நாம் எதிர் நோக்குகின்றோம். நாம் ஸ்ரோபரி பயிர்ச் செய்கையினைப் பெருக்குவதால் இப் பிரச்சினைக்கு ஒரு தீர்வாகவும் பெரியளவிலான இலாபத்தினை ஏற்றுமதி மூலமும் எமது மானெல் தீவிற்குப் பெற்றுத்தரமுடியும்.

அது மட்டுமல்லாது பயிர்ச்செய்கையின் போது பயன்படாது பயிரிடப் படாது காணப்படும் இடங்களினை (ஏறத்தாழ 15% நிலப்பரப்பை) வேறு பயிர்ச்செய்கைக்காக 99 வருடக்குத்தகைக்கு வழங்கல். இதன் மூலமாக அப்பிரதேசத்தில் வித்தியாசம் வித்தியாசமான மரங்கள் பயிரிடப்படும். இதன் காரணமாக அம் மண் மிகவும் பசளையுடையதும் பயிர்ச் செய்கைக்கு உகந்ததாகவும் காணப்படும். இது சுற்றாடல் மாசடைதலைத் தடுக்கவும் உதவும். பயிர்ச்செய்கையின் போது பெறப்படும் கழிவுகள், சருகுகள் போன்றன கூட்டெரு தயாரிப்பிற்குப் பயன்படுத்தப்பட்டு சுற்றாடலும் அழகாகப் பேணப்படும்.

இது எமது நாட்டிற்கு பெரும் இலாபத்தினையும் ஈட்டித்தர முடியும். அதுமட்டுமல்லாது பயிர்ச்செய்கை இடங்கள், கரும்புத்தொழிற்சாலை போன்றவற்றை சுத்தமாகப் பேணினால் அவற்றினை ஒரு சுற்றுலாத் தளமாகவும் பிரசித்தியடைய வைத்து, எமது நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்குப் பயன்படும் வகையில் ஆக்கிக் கொள்ளலாம்.

**ஆளும் கட்சி 2**

கூறிய திட்டம் எமக்கு மிகவும் சந்தோஷத்தை ஏற்படுத்தியுள்ளது. ஏனெனில் எமது நாட்டின் இயற்கை வளமும், மண் வளமும் நாம் அறிந்ததே. இந்த கரும்புச் செய்கை செய்யத்திட்டமிடப்பட்டுள்ள இடம் தற்போது எவரது பயன்பாட்டிலும் இல்லாத தரிசு நிலமாக கரும்புச் செய்கைத் திட்டம் செய்ய ஆரம்பிக்கப்படும் போது அப்பகுதியில் எமது மக்களை அங்கு மீள்குடி யேற்றம் செய்து அவர்களின் கல்வித் தகைமைகளுக்கு ஏற்ப கரும்புத் தோட்டத்திலும் சீனித் தொழிற்சாலையிலும் வேலைவாய்ப்புக்களை வழங்கத் தீர்மானித்துள்ளோம். மேலும் கரும்பு ஆலைகளில் எஞ்சும் கரும்பு சக்கைக் கழிவுகளை சேகரித்து யானை சரணாலாயங்களில் உள்ள யானைகளுக்கு உணவாக்கத் திட்டமிட்டுள்ளோம். மேலும் இங்கு தேக்கமடையும் கழிவுகளை

சேகரித்து கூட்டெரு தயாரித்து அதனையே கரும்புத் தோட்டங்களுக்கு வழங்கி இரசாயன கிருமிநாசினி பிரயோகத்தைக் குறைக்கவும் முடியும். அதுமட்டுமன்றி சேகரிக்கப்பட்ட கழிவுகளிலிருந்து உயிர் வாயு உற்பத்தியை மேற்கொள்ளவும் முடிவு செய்துள்ளோம். இத்திட்டம் நடைமுறைப் படுத்தப் பட்டால் ஆண்டின் மொத்தச் செலவில் 2% குறையும். அத்துடன் சீனி உற்பத்தியை மிகையாக்கி எம் நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் மானிய விலையில் வழங்கவும் எண்ணியுள்ளோம்.

அத்துடன் வறிய குடும்பங்களுக்கு மாதம் வழங்கும் சீனியின் அளவை 3kg இல் இருந்து 5kg ஆக அதிகரிக்க உத்தேசித்துள்ளோம். மேலும் கரும்பு வரியில் இருந்து ஆரம்பிக்கும் மதுபான உற்பத்தி நாட்டின் பொருளாதார வளர்ச்சியை இன்னும் முன்னுக்கு கொண்டு வரும். இதனால் நாட்டின் மொத்த வருமானம் 16% ஆல் அதிகரிக்கும். இந்த இலாபத்தைக் கொண்டு பல சமூகநலத் திட்டங்களை செயற்படுத்த ஆலோசனைகள் இடம்பெறுகின்றது.

**தனஞ்சி (Engineer)**

சபாநாயகர் அவர்களே, உலக வங்கித் தலைவர் அவர்களே, மற்றும் பேராசிரியர் அவர்களே, 5 நட்சத்திர ஹோட்டல் கட்டுவதற்குப் போடப்படும் திட்டத்தின் வேலைகள் தற்போது நடைபெறுகின்றன. இவ் விருத்திகள் இத் தீவில் இது வரை இல்லாத நவீன வசதிகளுடன் கூடிய வகையில் நிர்மாணிக்கப்படவுள்ளதுடன் மிகப் பிரமாண்டமான அளவு சுற்றுலாப் பயணிகளை ஒரே நேரத்தில் உள்ளீர்க்கக் கூடிய வகையில் திட்டமிடப் பட்டுள்ளது. நாம் இதற்காக நவீன இயந்திரங்களையும் பாவிக்கவுள்ளோம். இதன் மூலம் பல உள்ளூர் மக்களுக்கு பல வேலைவாய்ப்புக்களை வழங்கவுள்ளோம்.

நில்குமுது நீரிணையானது நாம் ஆராய்ச்சி செய்த அளவில் இத்தீவில் உள்ள நீரிணைகளிலே மிகப்பெரிதாகக் காணப்படுகின்றது. இந் நீரிணையில் பெரிய காற்றாடிகள் இரண்டினை இணைத்து இதன் மூலம் சுமார் 10 ஆயிரம் மகாவாட்ஸ் மின்சாரத்தை உற்பத்தி செய்யக் கூடிய மின் பிறப்பாக்கிகளைப் பயன்படுத்தவுள்ளோம். இவை ஜப்பானிலிருந்து இறக்குமதி செய்யப்படவுள்ளன. அத்துடன் நீரினை சுத்திகரித்து சுற்றுலா

விடுதிகளுக்கும் கரும்புச் செய்கைகளுக்கும் உரிய நீரினை வழங்க வுள்ளோம். இது நீரினை அதிக விரைவாகக் கொண்டு செல்லக்கூடிய வகையில் அமைக்கப்படவுள்ளது.

அத்துடன் இங்கு அமைக்கவிருக்கும் உயர் நெடுஞ்சாலையானது அனைத்து நாடுகளாலும் அங்கீகரிக்கப்பட்ட ஐதரோ காபன்களின் உற்பத்திகளால் அமைக்கப்படவுள்ளது. இது மிக நீண்டகாலம் பாவிக்கு மளவுக்கு மிகவும் வன்மையானதாகவும் சுனாமி, சூறாவளி, வெள்ளப் பெருக்கு போன்ற இயற்கை அனர்த்தங்களால் பாதிப்படையாத அளவுக்கு காணப்படும். நவீன வசதியுடன் கூடிய வகையில் உராய்வு விசையை அதிகரிக்கும் வகையில் தொழில்நுட்பத்தைப் பயன் படுத்தவுள்ளோம்.

மேலும் கோல்ப் விளையாட்டு மைதானமானது இத்தீவிலே உள்ள விளையாட்டு மைதானங்களை விட மிகப் பிரமாண்டமானதாக அமைக்கப்பட்டுள்ளது. இதற்காக புல் வகையினை மடகஸ்காரிலிருந்து கொண்டு வரவுள்ளோம். வெளிநாட்டு விளையாட்டு வீரர்களைக் கவரக்கூடிய வகையில் அமைக்கப்படவுள்ளது.

**ஆளும் கட்சி 2**

**சபையின் சபா விழிப்பு.**

சபையின் சபாநாயகர் அவர்களே மற்றும் ஆளும், எதிர்க் கட்சித் தலைவர்களே உறுப்பினர்களே, நிர்மாணி அவர்களே, பண்டிதமணி அவர்களே அனைவருக்கும் வணக்கம்.

நமது மானெல்தீவின் அபிவிருத்திக்கென பல திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அவற்றில் கட்டுமானங்கள் சம்பந்தமான கருத்தை தமது நிர்மாணி தனஞ்சி அவர்கள் முன்வைத்தார். அவற்றைப் பற்றிய எமது ஆளும் கட்சியின் கருத்துகளை முன்வைக்கிறேன்.

முதலில் பத்து ஹோட்டல்கள் அமைக்கப்பட இருக்கின்றன. இதற்காக நாம் உள்ளூர் வேலையாட்களைப் பெரும்பாலும் பயன்படுத்த இருக்கிறோம். இதனால் நமது மக்கள் பெரிதும் பயன்பெறுவார்கள். மற்றும் செலவுகள் குறைக்கப்படும். மற்றும் இது பெருமளவில் அன்னியச் செலவாணியை அள்ளித்தரும் திட்டமாகும். இதன்மூலம் நமது கடலுணவுகளின் பயன்பாடு அதிகரிக்கும் இது நம் நாட்டு மீனவர்கட்கு மிகவும் பயனாக அமையும்.

அடுத்து Green Way எனப்படும் அதிவேக நெடுஞ்சாலை இப்பாதையானது அனைவரும் பயன்படுத்தும் வகையில் அமைக்கப்ப டுவதால், அதிகளவு வாகன நெரிசல்கள் குறைக்கப்படும். மற்றும் கடற்கரைக்கு அண்மையாகவும் கடலுக்கு சமாந்தரமாகவும் அமைக்கப்பட இருப்பதால் அதிகளவான கடலுணவுகள் ஏற்றுமதி செய்யப்படும்.

அடுத்து நில்குமுது என அழைக்கப்படும் நீர் மின்னுற்பத்தி செய்யப்படும் திட்டமாகும். இது எமது கட்சித்தலைவரின் கண்காணிப்பில் இடம்பெறும். இதனால் அனேக கிராமங்கள் மின்னொளியில் மலர இருப்பதுடன் இவர்கட்கு 6 மாதங்களுக்கு இலவசமாக மின்சாரத்தை வழங்க இருக்கிறோம் என்பதை மனமகிழ்ச்சியுடன் அறியத் தருகிறேன். மக்களாகிய நீங்கள் இதனைப் புரிந்து கொள்ள வேண்டும்.

## எதிர்க்கட்சி 2

சபாநாயகர் அவர்களே! இந்த அரசாங்கம் கொண்டுவரவுள்ள 5 Star Hotel திட்டமானது வேலை வாய்ப்பு அந்நிய செலவாணி என்பனவற்றை ஈட்டுவதை விட சுற்றுச்சூழலுக்கு பாரிய பாதிப்பினை ஏற்படுத்தும் திட்டமாகும். அத்திட்டம் கரையோரப் பிரதேசங்களில் அதிகம் அமைவதால் இக் Hotel களிலிருந்து வெளியேறும் கழிவானது நேரடியாகக் கடலுக்கு அனுப்பப்படும். இதனால் கடற்கரையோரம் மாசடையும், வழிமாசடையும். மேலும் கடல் வாழ் உயிரினங்கள் பாரிய பாதிப்புக்கு உள்ளாகும். இதனால் கடலை நம்பி தொழில் புரிவோரின் வாழ்வாதாரம் பாதிப்படையும் கரையோரப் பிரதேசத்தில் அமைவதால் கண்டல் தாவரம் முருகைக் கற்பாறைகள், மரங்கள் என்பன அழிவடையும். இதனால் இயற்கைச் சமனிலைப் பாதிப்படையும்.

மேலும் கடற்கரையோரம் அழிக்கப்பட்டு கடல் நீர் உட் செல்லும் அபாயம் உள்ளது. இத்திட்டம் கரையோரங்களில் அமைக்கப்படும் போது நகர்ப்புறங்களில் இருந்து வெளியேறும் மழைநீர் வழிந்து ஓடுவது தடைப்படும். இதனால் நகர்ப்புறம் வெள்ளத்தால் பாதிப்பு ஏற்படும். சுனாமி போன்ற இயற்கை அனர்த்தங்கள் ஏற்படின் அரசு அமைத்த 5 Star Hotel இருந்த இடம் உருத்தெரியாமல் அழிந்துவிடும் அபாயம் உள்ளது. மேலும் இத்திட்டம் அமைக்கும் போது கரையோரத்தின் தரையானது பாதிப்படையும். இவ்வோட்டல்களில் களியாட்டம் என்பன இடம்பெறும் போது எமது

இளைஞர்கள் பலர் மதுபானம், போதைப் பொருள் என்பனவற்றிற்கு அடிமை ஆவார்கள். அத்துடன் கலாசாரம், பாரம்பரியம் என்பன பாதிப்படையும். அரசாங்கம் இத்திட்டத்தை உடனடியாக அமுல்படுத்துவதை விட முதலில் எமது தீவிற்கு வரும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்ய வேண்டும். இதற்கு இயற்கை வளங்களை உதாரணமாக வனப்பகுதிகளை முகாமை செய்து எமது நாட்டின் இயற்கை அழகை அதிகரித்து அதன் மூலம் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கச் செய்து பின்னர் எந்த இடங்களில் அதிகம் சுற்றுலாப் பயணிகள் வருகை தருகின்றனரோ அங்கு இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும். அத்துடன் அரசாங்கம் இந்த Hotel கள். அமைப்பதை விட ஒருசில Hotel கள் அமைத்து அதன்மூலம் அரசு இலாபம் அடைகிறது என அறிந்தபின் இத்திட்டத்தை மேலும் முன்னெடுத்துச் செல்லலாம்.

## பண்டிதமணி

**விழிப்பு....**

நான் சங்கத்தின் தலைவர் என்ற வகையிலும் சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு நிபுணர் என்ற வகையிலும் இத் திட்டங்கள் சார்பாக கருத்துக்களை வெளியிட வேண்டியுள்ளது. முதலாவதாக அமைக்கப்படவிருக்கும் 5 Star ஹோட்டல்களைப் பற்றிச்சொல்லலாம் என்று நினைக்கின்றேன். இவை கடற்கரைகளுக்கு அண்மையில் அமைக்கப்பட இருப்பதால் கடல் நீர் தரைக்குள் வரும் அபாயம் ஏற்படும். இதனைத் தீர்க்கும் விதமாக இதற்குரிய வேலைகளைச் செய்ய வேண்டும் என சம்பந்தப்பட்டவர்களையும் கேட்டுக் கொள்கின்றேன். மற்றும் தமக்கு ஒரு மிகப்பெரிய சவாலாக இருக்குமென நினைக்கின்றேன். அடுத்து நான் கூற விருப்பது Green Way அதிவேகப் பாதை அது நமக்கு பெரிதளவில் சுற்றாடல் சார் பிரச்சினைகளைக் கொண்டுவராத போதும் இப் பாதை அமைக்கப்படவிருக்கும் இடங்களில் உள்ள பயன்தரு மரங்கள் பல வெட்டப்படும் அபாயமிருக்கின்றது. இதனால் மழை வீழ்ச்சியில் பாதிப்பு ஏற்படும்.

கரும்புச் செய்கை இத்தீவில் என்றுமில்லாத அளவிற்கு மிகப்பெரிய அளவில் கரும்புச் செய்கை செய்வது என்பது மிகவும் சிக்கலுக்குரிதாகும். இதனால் சில வேளைகளில் சூழற் சமனிலை பாதிப்படையக் கூடும்.

இரசாயனப் பொருட்களை மருந்துகளாகப் பாவிப்பது தவிர்க்கப்பட வேண்டும். மற்றும் கரும்புச் செய்கை மூலம் சீனி உற்பத்தி செய்வதாகவும், மதுபானம் உற்பத்தி செய்வதற்காகவும் தனித்தனியாக தொழிற்சாலைகள் அமைக்கப்படவிருக்கின்றது. இத்தொழிற்சாலைகளில் இருந்து வெளி யேற்றப்படும் கழிவுகளைத் தகுந்த இடங்களில் அப்புறப்படுத்த வேண்டும்.

மற்றும் இக் கழிவுகளுடன் அமிலங்கள் நீக்கிய பின்னரே அவற்றைக் கடலில் கலக்க வேண்டும். அவ்வாறு செய்தல் அமில மழை, பாலை நிலமாதல், கடல் மாசடைதல் போன்ற சூழற்பிரச்சினைகள் ஏற்படுதல் தவிர்க்கப்படும்.

தொடர்ந்து மத்திய மலைநாட்டில் அமைக்கப்படவிருக்கும் நில்குமுது நீரிணை மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் மேல் சுற்றாடல் சார் பாதிப்புக்கள் தவிர்க்கப்படும். ஆனால் நன்னீர் மீன்களுக்கு சில பாதிப்புக்களை ஏற்படுத்தும் என ஊகிக்கிறேன். காரணம் காற்றாடிகளைப் பயன்படுத்துவதால் நீரின் தாவரப்பிளாந்தன்கள் அழிவடைவதுடன், உற்பத்தியும் குறையும். இது மீன்களின் அழிவுக்கு வழி அமைக்கலாம்.

அடுத்து கோல்ப் விளையாட்டுத்திடல் மற்றும் ஸ்ரோபரி பழச்செய்கை இவை இரண்டும் மிகச்சிறந்த திட்டங்களாகும். இவ்வாறான பயிர்களைப் பயிரிடுவதால் இங்கு அதிகளவான, பிராண வாயு எமது சூழலிற்கு, எங்கள் சூழலிற்கு கிடைக்கப்படும். இதனால் எங்கள் தீவு மட்டுமல்லாது பூமிக்கே பிராணவாயு சமநிலையைப் பேண ஏதுவாக அமையும்.

ஆகவே, இவ் அபிவிருத்தித்திட்டங்கள் தற்காலத்தில் தேவைப்ப டுகின்ற போதிலும் அவை எமது எதிர்காலத்து சந்ததிகளைப் பாதிக்காத வகையிலும், இயற்கைச் சமநிலை பாதிப்படையாத வகையிலும் மேற் கொள்ளப்பட வேண்டும் எனவும் சம்மந்தப்பட்ட தரப்பினரைக் கேட்டுக் கொள்கின்றேன்.

## ஆளும் கட்சி 3

சபையின் ஆணையாளர் அவர்களே, உலக வங்கி பிரதிநிதி அவர்களே, எமது கட்சியின் தலைவர் அவர்களே மற்றும் சுற்றாடல்துறை வல்லுநரும் காலநிதியுமான பண்டிதமணி ஐயா அவர்களே, அனைவருக்கும் வணக்கம். மானெல் தீவின் தற்போதைய ஆளும் கட்சி

என்ற வகையில் நாம் இந்த நாட்டின் அபிவிருத்திக்கென தற்போது உலக வங்கியின் நிதி உதவியுடன் பாரிய வேலைத்திட்டமொன்றை அமுல் படுத்தவுள்ளோம்.

அந்த வகையில் எவ்வாறான திட்டங்கள் நடைமுறைப்படுத்தப் படவுள்ளன என்பதைப்பற்றி ஏற்கனவே கூறியிருக்கிறார்கள். மற்றும் அவற்றில் உள்ள சாதகமான, பாதகமான விளைவுகளைப்பற்றி பண்டித மணி ஐயா அவர்கள் கூறியிருந்தார்.

முதலில 5 நட்சத்திர விடுதிகளை அமைப்பதால் கடல்நீர் தரைக்குள் வரும் அபாயம் உள்ளதாகக் கூறியிருந்தார். இதை நாம் தடுக்கும் விதமாக வேறு பகுதிகளில் இருந்து மண் கொண்டுவரப்பட்டு கடல்மட்டத்தைவிட உயர்வாக இவ் விடுதி அமைக்கப்பட இருப்பதோடு மண் அரிப்பத் தடுப்பதற்குரிய நடவடிக்கையும் மேற்கொள்ளப்படும் என உறுதியளிக் கின்றேன். அடுத்து Green Way என்று அழைக்கப்படும் அதியுயர் நெடுஞ்சாலையால் பல பயன்தரும் மரங்கள் அழிக்கப்படும் அபாயம் உள்ளதாகக் கூறினார். இதனால் நாம் பயன்தரு மரங்களை இயன்றளவு பாதுகாக்கும் படியாகவே திட்டங்களை வகுத்துள்ளோம்.

மற்றும் கரும்புச் செய்கை, ஸ்ரோபரி செய்கை போன்றவற்றிற்கு இயன்றளவு இயற்கை உரவகைகளைப் பயன்படுத்தத் தீர்மானித்துள்ளோம். இதனால் இரசாயனங்களின் பயன்பாட்டினைக் குறைக்க முடியும் என நினைக்கிறேன். மற்றும் மது உற்பத்தி பற்றி எதிர்கட்சியினர் தவறாகப் புரிந்து கொண்டு கடுமையாக விமர்சனங்களைக் கூறியிருக்கின்றனர். இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். ஏனெனில் நாம் மது உற்பத்தியினை மட்டுப்படுத்தப்பட்ட அளவே செய்வதற்காக ஏகமனதாக முடிவெடுத்து ள்ளோம்.

## எதிர்க்கட்சி 3

சபையின் ஆணையாளர் அவர்களே, உலக வங்கி பிரதிநிதி எமது கட்சியின் தலைவர் அவர்களே மற்றும் சுற்றாடல்துறை வல்லுநர் அவர்களே அனைவருக்கும் வணக்கம். மானெல் தீவின் தற்போதைய எதிர்க்கட்சி என்ற வகையில் இந்நாட்டின் அபிவிருத்திக்கென தற்போது உலகவங்கியின் நிதி உதவியுடன் பாரிய வேலைத்திட்டமொன்று அமுல்படுத்தப்படுவதை

பெருமையுடன் வரவேற்கின்றோம். ஆனால் அவற்றில் உள்ள பாதகமான மற்றும் சாதகமான விளைவுகளைப் பெற்று நம் நாட்டின் சுற்றாடல் தாக்க மதிப்பீட்டுத்துறை பேராசிரியர் அவர்கள் கூறியிருந்தார்.

முதலாவதாக ஐந்து நட்சத்திர விடுதிகளை அமைப்பதால் கடல்நீர் தரைப்பகுதிகளுக்குள் வரும் அபாயம் உள்ளதாக கூறியிருந்தார். அதற்கு ஆளும்கட்சி சொன்னார்கள் வேறு பகுதிகளிலிருந்து மண் கொண்டு வந்து கடல்மட்டத்தை விட உயர்வாக அமைப்போம் என்று. அவ்வாறு வேறு பகுதிகளிலிருந்து மண் கொண்டு வருவதால் அப்பகுதியில் மண்சரிவு போன்ற இயற்கை அனர்த்தங்கள் ஏற்படும் அபாயம் ஏற்படும். மற்றும் மண் கொண்டு வந்து நிரப்புவதற்கான பொருளாதாரச் செலவு அதிகரிக்கும். விவசாய நிலங்கள் பாதிப்படையும். மண் அகழும் சுற்றாடலில் நீர் தேங்குவ தால் டெங்கு நோய் போன்றவை ஏற்பட்டு அவர்கள் ஆரோக்கியம் அற்றவர் களாக மாறுவார்கள். எனவே இதற்கான மாற்றுத்தீர்வை முன்வைத்தால் ஏற்றுக் கொள்ள தயாராக உள்ளோம் பேராசிரியர் அவர்களே,

அடுத்து Green Way என்று அழைக்கப்படும் அதி உயர் நெடுஞ் சாலையால் பல பயன் தரும் மரங்கள் அழிக்கப்படும் அபாயம் உள்ளதாகக் கூறினார். அது இன்று முழுதான உண்மையான கருத்தாகும்.

## மங்கையர்க்கரசி

**விழிப்பு......**

தற்போது எமது நாட்டில் என்ன நடந்து கொண்டு இருக்கிறது என்று இங்கு இருப்பவர்களுக்குத் தெரியவில்லை போலும், அதனால் தான் இப்படியான திட்டங்கள் பற்றிப் பேசுகிறார்கள் என நினைக்கின்றேன். இப்போது நம் நாட்டில் இருக்கும் பாரிய பிரச்சினை போதைப் பொருள் பாவனை. இதற்கு எத்தனையோ பேர் அடிமையாகி வாழ்வை இழந்து நிற்கிறார்கள். போதைப் பொருள் பாவனையானது அதைப் பயன்படுத்து வோரை மட்டும் பாதிக்கவில்லை. அவர்களது குடும்பத்தையே நிலைகுலைய செய்து விடுகிறது. அதனால் குடும்பத் தலைவி என்ற ரீதியில் பெண்களே மிகவும் பாதிக்கப்படுகின்றனர். மேலும் வயது வந்தவர்கள் மட்டுமன்றி சிறுமிகள் வரை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்படுகின்றனர் என்பதை நாளாந்த பத்திரிகைகளின் ஊடாக அறிய முடிகின்றது.

அது மட்டுமா? இந்தப் போதைப் பொருளிற்கு நம் நாட்டின் பொக்கிஷங்களான மாணவர்களும் இளைஞர்களும் அடிமையாகி இருப்பது எனக்கு மிகவும் மனவருத்தத்தை அளிக்கின்றது. போதைப் பொருளையும் பெண்கள் மீதான வன்முறையையும் எப்படித் தடுப்பது. அதற்கான தீர்வு என்ன என்பது பற்றி சிந்தியாது, 5 Star Hotel உம் மதுபான தயாரிப்பும் அதிவேகப் பாதையும் எனப் பல திட்டங்களை முன்னெடுப்பது ஒரு நாட்டின் அபிவிருத்தியை அந்த அளவுக்கு முன்னேற்றும் என எனக்குத் தெரியவில்லை. "சுவர் இருந்தால் தானே சித்திரம் வரைய முடியும்" வருங்கால சந்ததியினர் அழிந்து கொண்டு போகும் வேளையில் நாட்டின் சமூக பொருளாதாரத்தை மேம்படுத்தி என்ன பயன். அந்நிய செலவாணியை அதிகரித்துத்தான் என்ன பயன். போதைப்பொருளுக்கான தீர்வை காணாது மதுபானத் தயாரிப்பை வேறு ஊக்குவிக்கப் போகிறார்களாம். இதை கேட்க வேடிக்கையாக உள்ளது. இவ்வாறான திட்டங்களுக்கு ஒதுக்கும் நிதியின் ஒரு பகுதியை சிறுவர் விவகார அமைச்சிற்கும், மகளிர் அமைச்சிற்கும் அளிப்பதன் மூலம் அவர்களுக்கான சிறந்த வாழ்க்கையை அமைத்துக் கொடுக்கலாம். அதன் பின்நாட்டின் அபிவிருத்தியை உயர்த்தும் அத்திட்டங் களை வேண்டுமானாலும் முன்னெடுக்கலாம்.

## ஆளும் கட்சி 4

மங்கையர்க்கரசியின் பெண்கள் தொடர்பான கருத்துக்கு நான் ஆதரவளிக்கின்றேன். பெண்கள் நாட்டின் கண்கள். பெண்களுக்கு மதிப்பளித்து முன்னேறியது நமது கலாசாரம் ஆனால் இன்று பெண்களின் நிலை கேள்விக் குறியாகியுள்ளது. இன்று பெண்கள் வீதியில் சுதந்திரமாக நடமாட முடிவதில்லை ஒரு பெண் வீட்டை விட்டு சென்றால் மீண்டும் வீடு திரும்புவது கேள்விக்குறியாகவுள்ளது. நாம் இம்முறை தேர்தலில் வெற்றி பெற்றதுக்கு சென்ற வருடம் எதிர்க்கட்சியின் ஆட்சியில் ஏற்பட்ட பெண்களுக்கு எதிரான அநியாயங்கள் தலைவிரித்தாடியமை காரணமாக மக்களுக்கு இவ் எதிரணியின் மீதான நம்பிக்கை இழப்பே எம் வெற்றிக்கு பெரிய பலமாக அமைந்தது இதுவரை மானல்தீவில் பெண் துஷ்பிரயோகம் சம்பந்தமான வழக்குகள் இதுவரை முடிவுக்கு வராதமையே அதிகம் அது இச்சபையில் உள்ள அனைவருக்கும் தெரியும். பல கூட்டு வன்புணர்வு,

பாலியல் துஷ்பிரயோகம் அவற்றுக்கு எதிரான பதாகைகள் தாங்கிய போராட்டங்கள் அதிகம். நடாத்தப்பட்டு வருகின்றன. அதன் போது பாதிக்கப்பட்டது பல அப்பாவி மக்களே. போராட்டங்கள் கண் துடைப்பாகவே இருக்கின்றன. இதனை சீர்செய்ய மங்கையர்க்கரசியின் கோரிக்கையை ஆமோதிக்கிறேன். பள்ளி மாணவர்களுக்கு சரியான விழிப்புணர்வு இல்லை பாலியல் சம்பந்தமாக அதோடு கிராமங்களில் சரியான விழிப்புணர்வு இல்லை இவ்வாறான பாலியல் துஷ்பிரயோகங்கள் நடைபெற்றாலும் வழக்கு பதிவு செய்யப்படுவன 20% அதிலும் தீர்ப்புக்கள் வழங்கப்பட்டன 001% மீதி அனைத்தும் கிடப்பில் போடப்பட்டுள்ளன. ஆதாரங்கள் இல்லை என்ற கறுப்புத்துணியின் கீழ் இதையெல்லாம் தடுக்க பெண்களின் சட்டதிட்டங்கள் கடுமையாக்கப்பட வேண்டும். மேலும் மானல் தீவை மதுவற்ற நாடாக உருவாக்க ஜனாதிபதி தீர்மானமெடுக்க வேண்டுமென வலியுறுத்து கின்றேன்.

**எதிர்க்கட்சி - 4**

மங்கையற்கரசி அம்மையார் மானெல் தீவின் கலாசாரத்தில் ஏற்பட்டுள்ள கறைகளைக் கூறினார். நன்று ஆளும் தரப்பின் சில கருத்தை முன்வைத்துள்ளனர். தம்முடைய ஆட்சியில் தவறே இல்லை என்பது போன்று காணப்படுகின்றது இக்கருத்துக்கள் பெண்களுக்கான கலாசார த்தின் அடையாளம் ஆனால் மானல் தீவின் கலாசாரம் கடைகளில் விற்கும் பொருளாக மாறியுள்ளது என்றே எண்ணத் தோன்றுகின்றது. இவர்களின் ஆட்சியில் தான் சீர்கேடுகள் தலைவிரித்து ஆடுகின்றன. பெண்கள் மீதான வன்முறைகள் அதிகரித்துள்ளன. தினமும் பத்திரிகை செய்தி, ஊடகங்களில் ஏதோ பெண் மீதான வேற்றுமையினை வெளிப்படுத்தும் செய்திகள் வெளியாகி வருகின்றன. சிறுமிகள் மீதான துஷ்பிரயோகங்கள் அதிகரித்துள்ளன. தமது உறவினர்களால் துஷ்பிரயோகம் செய்யப்படுகின் றனர். என்பதே மிகக் கேவலமான உண்மை. தொடர் செயற்பாடாக இடம் பெறும் துஷ்பிரயோகத்தைக் கட்டுப்படுத்த ஆளும் தரப்பு என்ன செய்தது? வேடிக்கை மட்டும் பார்த்துக் கொண்டிருக்கின்றன.

**பால் தாக்ரே**

இன்றைய காலகட்டத்தில் மக்களின் சத்துணவு ஊட்டத்தில் பசும்பால் முக்கிய பங்குவகிக்கின்றது. சிறு பிள்ளை தொடக்கம் முதியவர் வரை விரும்பும் ஓர் சத்துணவு. பிள்ளைகளின் அறிவாற்றல் வளர்ச்சியை தூண்டுவதற்கு பசும்பால் மிகவும் முக்கியம் வாய்ந்தது. எமது திருநாட்டின் அதிகபட்ச மேய்ச்சல் நிலங்கள் காணப்பட்டன. அம் மேய்ச்சல் புல் வெளிகளில் மருத்துவ குணம் வாய்ந்த மூலிகைப் புற்கள் காணப்படுவ தாகவும் அப்புற்களை உண்ணும் பசுமாட்டின் பாலில் அதிகபட்ச மருத்துவ குணமுண்டு என ஆராய்ச்சிகள் குறிப்பிடுகின்றன. இதனால் எமது நாட்டின் பசும்பால் உலகளாவிய ரீதியில் முக்கியம் பெற்றதும் கேள்வியும் உடையதாகக் காணப்படுகின்றது. முற்கால அரசாங்கம் எமக்கு குறிப்பிடத்த க்களவு உதவிகள் புரிந்த போதும் அது திருப்திகரமானதாக இல்லை சிறந்த பசும்பால் உற்பத்தி இருந்த பொழுதும் அதனை சந்தைப் படுத்துவதில் அதிகம் அக்கறை காட்டவில்லை என்பது எமக்கு மன வேதனையைத் தருகின்றது.

இப்போதைய அரசாங்கம் பால் கறப்போர் ஊக்குவிப்பு திட்டம் எனும் பெயரில் நிதி ஒதுக்கப்பட்டது. ஆனால் மாட்டின் சாணம் அள்ளவே அந்நிதி போதுமானதாக இல்லை அவ் நிலைப்பாட்டில் மாடு கன்று ஈன்றால் வருடத்திற்கு பால் மறிப்பு இப்படியான சிக்கல் நிலைகளை எமது தொழிலாளர்கள் எதிர் நோக்குகின்றனர். இப்பசு மாடுகளை நம்பி பல குடும்பங்கள் வாழ்கின்றன. எமது பிரச்சினை என்னவெனில் பசுப்பால் உற்பத்தியினை உலகளாவிய ரீதியில் சந்தைப்படுத்த வேண்டும் இதற்கு நாமும் எமது தொழிலாளர்களும் ஆர்வத்துடன் உள்ளோம். நீங்கள் எமக்கு உதவத்தயாரா? திருநாட்டில் பசுப்பாலினை பால்மாவாக மாற்றும் தொழிற்சாலைகள் உள்ள போதும் வெளிநாட்டு பால்மாவினை அரசாங்கம் உற்பத்தி செய்வது எமக்கும் எமது தொழிலாளர்களுக்கும் ஏமாற்றத் தினையும் நஷ்டத்தையும் ஏற்படுத்தியுள்ளது. பொதுவாக உள்ளூர் உற்பத்தி யினை Local என்று ஆங்கிலத்தில் அழைப்பர். ஆனால் எமது மக்கள் Local என்றால் தரம் குறைவான பொருள் என மனதினில் எண்ணம் கொண்டுள் ளனர். இதனால் வெளிநாட்டு பால்மா இறக்குமதி தடைப்படுவது கடினமாகி யுள்ளது. இவ்வாறான நிலைகளை களைத்து தற்கால தொழில்நுட்ப

வளர்ச்சிக்கு ஏற்ப பசும்பால் உற்பத்தியை வளர்ச்சியடைய அதிகம் முன்னிற்க வேண்டும். அழகிய இயற்கை வளம் பொருந்திய எம் நாட்டில் மலைகள், காடுகள், அருவிகள், மேய்ச்சல் நிலங்கள் என்பன காணப்படு கின்றன. இருந்தபோதிலும் அவ் நிலங்களில் காடுகளை மேய்த்து வளப்படுத்த அரசாங்கம் முன்வர வேண்டும். எமது பசுப்பால் உற்பத்தியில் 200 தொழிலாளர்கள் உள்ளனர். ஆனால் இன்னும் 10,000 தொழிலாளர் கள் தேவையாக உள்ளது. எம்மிடத்தில் நிதி பற்றாக்குறை காணப்படுகி ன்றது. எனவே இந்நிலையை மாற்ற அரசாங்கம் முன்வர வேண்டும்.

## எதிர்க்கட்சி - 4

அரபு நாடுகளைப் போன்றே கொடுமையான தண்டனைகளை வழங்கும் சட்டம் இயற்றப்பட வேண்டும். சட்டம் என்பதைத் தாண்டி பயம் என்ற உணர்வு மேலோங்குவதால் மட்டுமே இது போன்ற மாபாதகர்களை ஒழிக்க முடியும். சிறுமிகள் மற்றும் பெண்பிள்ளைகள் விழிப்பூட்டப்பட வேண்டும். பாடசாலை மட்டத்தில் மாணவர்களை தெளிவூட்டும் செயற் பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். பாலியல் கல்வியை போதியுங்கள், சமய போதனையை மாணவர் மத்தியில் ஊக்குவித்து ஒழுக்கமான சமூகத்தை உருவாக்கும் செயற்பாடுகளை ஆளும் தரப்பு முன்னெடுக்க வேண்டும். போதைப் பொருட்களின் வருகை அதிகரித்துள்ளது. தினமும் கேரளக் கஞ்சா மற்றும் ஹெரொயின் முதலியவற்றை இறக்குமதி செய்வதாக அறிகின்றோம். தேவைக்கு அதிகமாகவே கடற்கரைப் பாதுகாப்பும் பொலிசாரின் கட்டுப்பாடும் உள்ளது. பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டதாக கூறும் ஆளும் தரப்பினர் ஏன் போதைப் பொருள் வருகையினைக் கட்டுப்படுத்து வதில்லை.

## எதிர்க்கட்சித் தலைவர்

5 நட்சத்திர ஹோட்டல்களோ அதனை அமைப்பதனூடாக இப்போது நாட்டிற்கு என்ன இலாபம்? ஹோட்டல்களை அமைப்பதனால் சுற்றுலா பயணிகளின் வருகை அதிகரிக்கலாம். நாட்டில் பொருளாதாரம் மேம்படலாம் ஆனால் பொருளாதார வசதிகளற்ற மக்களுக்கு என்ன பயன்? சூழல் மாசடைதல் கரையோரத்தின் பாதுகாப்பு இழக்கப்படல், கரையோரம்

பாதிக்கப்படும், கலாசார சீர்கேடுகள் ஏற்படல் என்ற பிரச்சினைகளே அதிகரிக்க வாய்ப்புக்கள் உண்டு. 2500 ஹெக்டேயரில் கரும்புச் செய்கை மேற்கொள்வதனூடாக சீனி உற்பத்தி செய்வது நல்ல விடயமாக இருக்கலாம். ஆனால் மதுபான ஊக்குவிப்பின் மூலம் என்ன பயன்? மக்களின் வாழ்க்கையினையும், இளைஞர்கள் குடிப்பழக்கத்திற்கு அடிமையாகும் நிலைதான் ஏற்படும். இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்க வேண்டும் என்றால் வேறு ஒரு மொழி மூலம் பெற்றுக்கொடுங்கள் அதை விடுத்து ஹோட்டல்களை அமைத்தல், சாராயம் உற்பத்தி, ஊக்குவிப்பு என்று நாட்டிற்கு பிரச்சினை கொண்டு வராதீர்கள்.

## ஆளும் கட்சித் தலைவர்

மானெல் தீவின் முத்துக்களே, என அரசியல் வாழ்வின் சத்துக்களே, மக்களே, சபாநாயகர் அவர்களே, இடியே விழுந்தாலும் என்னைவிட்டு ஒரு அடிகூட நகராத என் கட்சி உறுப்பினர்களே நாங்கள் Children Park பற்றி கதைத்தால் சம்பந்தம் இல்லாமல் யுராசிக்பார்க் பற்றி கதைக்கும் எதிரணியினரே, இன்று மானெல்தீவு வரலாற்றில் மகத்தான நாள். எங்களின் அரசாங்கம் மக்களின் அரசாங்கம். அபிவிருத்திகள் செய்ய வேண்டும். நாட்டை வளர்ச்சிப்பாதைக்கு கொண்டு செல்ல வேண்டும்.

சிந்தியுங்கள், சிங்கப்பூர், மலேசியா, சைனா, யப்பான், கொரியா இவையெல்லாம் வளர்ச்சியடைந்துள்ளது சரியா காரணம் என்ன? ஜப்பான்காரனுக்கு மூக்கில்லை ஆனால் மூளை இருக்கிறது. நமது எதிர்க்கட்சி போன்றோர்க்கு மூக்கிருக்கிறது. ஆனால் மூளை இல்லை. நாம் அப்படியில்லை இது அறிவாளிகளின் அரசாங்கம். எனவே தான் நானும் எனது அமைச்சர்களும் உலக வங்கியும் இணைந்து நாட்டை வழிக்கப் போகின்றோம் Sorry sorry வளர்க்கப்போகின்றோம்.

6 திட்ட வரைபுகளை வைத்திருக்கின்றோம் 1 ஆவது திட்டம் 10 5Star ஹொட்டல்களை கட்டப்போகின்றோம் தெற்கிலே 2, மேற்கிலே 2, கிழக்கிலே 2, வடக்கிலே 2, நடுவிலே 1, கடலுக்குள்ளே 1 இதன் மூலம் ஏராளம் VIP களுக்கு வேலை கிடைக்கும். உங்களுக்குத் தெரியும்தானே இன்று வேலையில்லாத இளைஞர்கள் கொடி பிடிக்கிறார்கள், றோட்டை மறிக்கிறார்கள், பேரணி செய்கிறார்கள் அட இதுதான் பரவாயில்லை

facebook, twitter, whatsapp எல்லாம் கலாய்க்கிறார்கள். அதுவும் பிரத்தியேகமாக group அமைத்து கலாய்க்கிறார்கள். அரசாங்கத்தை Entertainment ஆக்கிவிட்டாங்க அன்பான மக்களே அரசாங்கத்தை கேலி செய்ய ஒருபோதும் நீங்கள் அனுமதிக்க வேண்டாம்.

ஒரு ஹோட்டலின் 200 அறைகள்படி 10 ஹோட்டல்கள் அமைக்கப் போகின்றோம். குறைந்தது மாதம் ஒன்றிற்கு 50000 turist களை எதிர் பார்க்கிறோம். அதுமட்டுமல்ல 200 ஏக்கரில் கோல்f விளையாட்டுத்திடல் செய்யப்போகிறோம்.

## நீதிபதி (சபாநாயகர்)

எங்களுடைய மானெல் தீவில் மேற்கொள்ளும் கரும்புச்செய்கை சூழல் சமநிலையைப் பேணுவதற்கு துணை செய்யக்கூடிய ஒரு திட்டமாகும்.

கோல்ப் விளையாட்டுத்திடல் அமைப்பதனூடாக அந்நிய செலாவணியை துரித வளர்ச்சிப்பாதைக்கு இட்டுச் செல்வதுடன் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகை மற்றும் பல உள்ளூர் வீரர்களுக்கும் களமாக அமையும்.

5 star hotel அமைக்கும் போது மண் கட்டமைப்பு பாதிப்படை யாமலும் நீர்மாசு படாமலும் எங்கள் தீவின் கடல் வளங்கள் சிதைவடை யாமலும் பாதுகாப்பதோடு ஆங்கிலத்தேர்ச்சி பெற்ற தொழிலாளர்களுக்கும் தொழில் வாய்ப்பை ஏற்படுத்துவது வரவேற்புக்குரியதாகும்.

பசுப்பால் உற்பத்தியினூடாக போசாக்கான தேசம் உருவாகும் என்பது தெளிவாகின்றது அத்தோடு மேட்டு நிலங்கள் புற்தரைகள் பாதுகாக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்க சிறப்பம்சமாகும்.

உங்களால் அமைக்கப்பட விருக்கும் Green way எனப்படும் தொடர் அதிவேகப் பாதையின் இரு பக்கங்களிலும் மர நடுகை செயற்பாட்டை முன்னெடுத்தால் எமது நாடு இன்னும் எழில் மிகு நாடாக உருவாகும் என்பதில் ஐயமில்லை.

**பாடல் - 01**

ஓங்கி வளர்ந்தது தீவு
எட்டுத் திசையும் பரவும் தீவு
வளம் கொழிக்கும் தீவு
தன்னி.. கரில்லாதீவு
ஆ. . . ஆ. . . ஆ. . . .

**பாடல் - 02**

உயர்ந்தவர்கள் நாமெல்லாம்
மானெல்தீவின் மக்கள் நாம்
தளர்ந்து இனிக் கிடக்க மாட்டோம்
நாமெல்லாம் நிமிர்ந்து நிற்போம்.

ஆளும் கட்சி, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மற்றும் யாவரும் இணைந்து கொள்ளல்.

**திரை**

**குறிப்பு**

1. இந்நாடகம் உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியால் 05.06.2016 அன்று மேடையேற்றப்பட்டு வரவேற்பைப் பெற்றது.
2. 21.09.2016 அன்று தேசிய சுற்றாடல் முன்னோடிப் பாதையாகவும் பெரதேனிய கல்வியியற் கல்லூரியில் இந்நாடகம் தேசிய ரீதியில் மேடையேற்றப்பட்டது.

# இப்போதைக்கு என்ன வழி?

(தெருவெளி நாடகம்)

கலைஞர் குழுப்பாடல்

(மக்களைக் கூவி அழைத்து மேள தாளங்கள் முழங்க தெருக்கள் சென்று ஒரு பொதுவான இடம் கூடி)

ஓடி வாருங்கோ! ஓடி வாருங்கோ!
நாடகம் பார்க்க ஓடி வாருங்கோ (2)
அம்மா வாங்கோ அப்பா வாங்கோ
தம்பி வாங்கோ தங்கச்சி வாங்கோ
அண்ணா வாங்கோ அக்கா வாங்கோ
அப்பு வாங்கோ ஆச்சி வாங்கோ
நாடகம் பார்க்க ஓடி வாருங்கோ (2)

(மக்கள் சுற்றிவர வந்த பின்னர்)

ஒருவர் - என்ன கதை
மற்றவர் - எங்கடை கதை
இன்னொருவர் - எங்கடை கதையென்றால் என்ன கதையப்பா?
மற்றொருவர் - எங்கடை கதை அது என்ன கதை
தலைவர் - போதையாலே அழியும் கதை
போதையாலே அழியும் கதை
குழு - போதையாலே அழிந்த கதை
போதையாலே அழிந்த கதை

இன்னும் ஒருவர் - சரி, சரி சொல்லுங்கோ, நல்ல கதைபோல கிடக்கு
கேட்பம் கேட்பம்.

(இவ்வேளையில் பத்திரிகை கொண்டு வரும் ஒருவர் தன்முகம் தவிர்ந்த ஏனைய இடங்கள் தெரியாவண்ணம் பெரிய துணி ஒன்றில் பல பத்திரிகைகள் ஒட்டியவாறு விமானம் வருவது போன்று பேப்பர், பேப்பர் எனக் கூவியவாறு ஓடிவந்து உயரமான இடமொன்றில் ஏறி நிற்றல்)

ஒருவர் - அந்தா பேப்பர்காரப் பையன் வந்திட்டான். என்னெண்டு பார்ப்பம். இல்லையெண்டால் எனக்கு சாப்பாடு செமிக்காது.

பேப்பர் பையன் - இந்தாப்பிடி, உந்தா படி 20 ரூபா 20 ரூபா

மற்றவர் - (உயர்த்திப்பிடித்து) மதுபோதையில் வந்து மனைவியை அடித்த கணவனை அடித்ததால் கணவனின் கைமுறிந்து ஆசுபத்திரியில் அனுமதி

இன்னொருவர் - போதையில் வாகனம் ஓட்டி 5 பாடசாலை மாணவரைக் கொன்ற சாரதிக்கு தூக்குத்தண்டனை.

வேறு ஒருவர் - பாடசாலை அருகே போதை வஸ்து விற்றவர் பொலிசாரைக் கண்டவுடன் தப்பி ஓடினார்

ஒருவர் - ஓம் கொஞ்சம் பிடிபடும் கனக்க ஓடிப்போகும்

மற்றொருவர் - சொகுசு காரில் 2 கோடி கேரளாக்கஞ்சா பொலிசாரால் மீட்பு

மற்றவர் - அப்ப பிடிபடாதது எவ்வளவு?

வேறு ஒருவர் - என்னடா ஒரே போதைச்செய்தியாக்கிடக்கு.

தலைவர் - போதைச்செய்தி என்ன? போதை அரக்கனே வாறாங்கள் ஓடுங்கோ எல்லாரும்.

**குழுப்பாடல்**

போதை அரக்கன் - ஐயா வாறார் ஐயா வாறார்
தள்ளி நில்லுங்கோ தண்ணி தாரன்
எட்டி நில்லுங்கோ முட்டி தாரன்
விலத்தி நில்லுங்கோ தாகம் தீர்ப்பன்.

ஒரு சிலர் - (அரக்கனிடம் வந்து) ஐயா ஐயா என்னன்னை எல்லாம் புதுசாக்கிடக்கு! பளபளக்குது! மினுமினுக்குது சாக்கடிக்குது

(ஒரு சிலர் தண்ணிக்காக அடிபட மற்றவர் விலத்தி நிற்பர்)

போதை அரக்கன் - அன்பு மக்களே ஆசை மக்களே
உங்கள் உள்ளம் நாடி வந்துள்ளேன்
உங்கள் தாகம் தீர்ப்பேன்
என்னை நாடுங்கள் எல்லாம் இலவசம்

எல்லாரும் வரிசையா வந்து சோமபானம் பருகுங்கோ

ஒருவர் - எனக்கு வேண்டாம்

மற்றவர் - மனிசிக்குத் தெரிந்தால் கோவிப்பாள்.

இன்னொருவர் - சும்மா வாறதை ஏன் விடுவான்.

வேறு ஒருவர் - அது தானே காசுக்கு வாங்கிறது எண்டால் எவ்வளவு காசு? ஆர் தருவினம்?

இன்னும் ஒருவர் - ஆத்திலை போறதண்ணி அண்ணைகுடி தம்பி குடி

(குடிப்பதற்கு பின்னின்றவர்களும் மெல்ல மெல்ல கிட்ட வந்து அடிபட்டுக் குடிப்பார்கள். நன்றாக மது அருந்திவிட்டு கிடப்பார்கள். மீண்டும் போதை அரக்கன் வர ஓடிச்செல்வார்கள்)

போதை அரக்கன் - இந்த முறை காசு, முந்துற ஆக்களுக்கு முன்னுரிமை

ஒருவர் - இண்டையான் கூலி 1000 ரூபா, அதைத்தாறன் தாங்கோ, (குடித்துவிட்டு) சோக்காய் இருக்கு.

மற்றவர் - என்னட்டைக் காசில்லை, மோதிரம் கிடக்கு தரட்டே இந்தாங்கோ, ஊத்துங்கோ

இன்னொருவர் - என்னட்டை ஒண்டுமில்லை.

போதைக்காரன் - அம்மாவின்ரை சங்கிலி அல்லது தங்கச்சியின்ரை தோடு கிடக்கும் கொண்டுவா.

வேறு ஒருவர் - என்ரை வீட்டு உறுதியைக் கொண்டு வாறன்

இன்னும் ஒருவர் - நான் வாறன் இப்ப தாலிக்கொடியோடை (பெரிய தாலிக்கொடி போல செய்யப்பட்டதை போதைக் காரருக்கு போட்டு விட்டு வாங்கிக்குடிப்பார். போதைக் காரன் வெளியேறுவார்) அனைவரும் தமக்குள் சண்டைவிடுவர்.

**பாடல் -**

நாங்களே எமக்குள் மோதிக்கொள்கின்றோம்
அறிந்தும் போதுவோம்
அறியாமலும் மோதுவோம்
ஆர் ஆரோ ஆர் இவரோ (2)

ஒருவர் - எனக்கு ஒரே குழப்பமாக இருக்கு குடிக்கவேணும் போல கிடக்கு. குடிக்காட்டி உடம்பெல்லாம் நடுங்குது நான் என்ன செய்ய

மற்றவர் - எனக்கு ஊசி போடுங்கோ.
(பலரும் குடியால் அவதிப்படுவர் அப்போது ஒரு பெரியவர் துவிச்சக்கர வண்டியில் பாடல் ஒன்றை முனுமுனுத்தபடி அரங்கினுள் நுழைவார்)

பெரியவர் - என்ன எல்லாரும் கஸ்டப்படுறியள் என்ன நடந்தது

ஒருவர் - ஆசை ஆசையாய்க் குடிச்சன் குடியை நிப்பாட்ட இயலாமல் இருக்கு ஐயா

பெரியவர் - நீங்கள்

மற்றவர் - வெளிநாட்டிலை இருந்து காசு வருது குடிச்சன் இப்ப பாக்க யாருமில்லை ஐயா.

வேறு ஒருவர் - பள்ளிக்கூடத்திலை ஒருத்தன் கொண்டுவந்து இலவசமாக வித்தான். பிறகு காசெண்டான் பிறகு ரியூசன் காசெல்லாம் செலவழிச்சுப்போட்டன். இப்ப என்னோட படிச்சவன் எல்லாம் பெரிய ஆக்களா இருக்கிறாவான் நான் என்ன செய்ய.

இன்னொருவர் - ஐயா, ஐயா ஏதாவது வழி சொல்லுங்கோ, என்னைக் காதலிச்சவள் ஏமாத்திப்போட்டாள், குடிச்சன் அவள் கட்டியிட்டாள், நான் குடிச்சதாலை என்னையொருத் தரும் கட்டமாட்டாளுகளாம் ஐயா வழிசொல்லுங்கோ...

பெரியவர் - நீங்கள் படிச்சவர் மாதிரி இருக்கிறியள்

இன்னும் ஒருவர் - ஐயா, வேலை செய்யிற இடத்திலை பாட்டி என்டாங்கள் குடிச்சன், நல்லாயிருந்தது நல்லாக்குடிச்சன், லோன் எடுத்துக்குடிச்சன் வேலையை விட்டு நிறுத்திப் போட்டாங்கள் லோ, லோ எண்டு அலையிறன் என்னையா தீர்வு

பெரியவர் - நாங்கள் சந்தோசத்திலையும் குடிக்கிறம், துக்கத்திலையும் குடிக்கிறம் என்னண்டு இரண்டுக்கும் மருந்து ஒன்றாகும். இது விளங்கேல்லை. கலியாண வீட்டிலை பேர்த்தே வீட்டில குடி பிறகு செத்த வீட்டிலை குடி. காதலிலை வெற்றிக்கும் குடி தோல்விக்கும் குடி எல்லாருக்கும் நான் ஒண்டு சொல்லுறன் நீங்களாக மெல்ல மெல்ல குடியை விட்டால் விடலாம். இல்லையெண்டால் கஸ்டம். அல்லது யாழ்ப்பாணம் சாவகச்சேரி ஆஸ்பத்திரியிலை ஒரு பிரிவு இருக்கு அங்கே போனால் நீங்கள் மனிதராக மாறலாம். அல்லது மன்னாரிலை தோட்ட வெளி எண்ட இடமிருக்க அங்கை போகலாம்.

ஒருவர், மற்றவர் - ஐயா மன்னாருக்குப் போறது கஸ்டம் உங்கை சாவகச்சேரிக்குப் போறம் நாங்கள் பட்டது காணும். ஐயா! உந்தப் பள்ளிக்கூடங்களுக்கு பக்கத்திலை போதை வஸ்து விக்கிறவங்களைப் பிடியுங்கோ எல்லாப்பிள்ளையளையும் மண்ணாக்கிப் போடுவாங்கள்.

இன்னொருவர் - சாராயம், கசிப்பு, எண்டிருந்து இப்ப கஞ்சா, மாவா எண்டெல்லாம் கொண்டு வாறாங்கள் அதுகளைப் பிடியுங்கோ.

பெரியவர் - சரி, சரி நீங்களாகத் திருந்தினா உண்டு. கடத்தல் காரரை பொலிஸ், சட்டம் பார்த்துக்கொள்ளும் நாங்கள் அவற்றை வெறுத்து ஒதுக்குவோம்

(மக்களைப் பார்த்து)

நீங்களும் சொல்லுங்கோ இவையில்லாட்டி முடிவு சரிதானே.
நாங்கள் இப்ப எங்க நல்ல மனிதர்களாவோம்
பாட்டொண்டு பாடிப்போட்டு இது பற்றிக்கதைப்பம்
இது நாடகமல்ல, உண்மை நிஜம்

எல்லோரும்

போதை எனும் சாபத்தை எம்மிலிருந்து அகற்றுவோம்
நல்ல பல செய்திகளை ஊரெங்கும் பரப்புவோம்
பண்பாடு ஒழுக்கத்தை என்றென்றும் போற்றுவோம்
நாமெல்லாம் மனிதர்கள் (2)
மானுடப் பண்பை மேலோங்கச்செய்வோம்
நாமெல்லாம் மனிதர்கள் (2)

(இந்த நாடகம் 2015 ஆம் ஆண்டு போதை ஒழிப்புத் தொடர்பான விழிப்புணர்வு நாடகமாக வடமராட்சி பிரதேச செயலகத்துடன் இணைந்து பல இடங்களில் அளிக்கை செய்யப்பட்டது. (கற்கோவளம், பருத்தித்துறை நகர், அல்வாய் இன்பர்சிட்டி, சக்கோட்டை, வல்வெட்டித்துறை நகர், ஆதிகோவிலடி, தொண்டமனாறு)

ஒழுங்கமைப்பு - செ.செல்வசுகுணா கலாசார உத்தியோகத்தர்.
மேற்பார்வை - இ.த.ஜெயசீலன் பிரதேச செயலாளர்
எழுத்துரு, நெறியாள்கை - க.திலகநாதன்
(இயக்குனர் ஆடுகளம் அரங்கக்குழு)

**பங்கேற்றவர்கள்**

1. க.திலகநாதன் (விரிவுரையாளர் – யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி)
2. த.சுதன் (ஆசிரியர் – வவு/கணேசபுரம் ம.வி)
3. து.அயூரன் (ஆசிரியர் – யா/மகாஜனக்கல்லூரி)
4. த.ரஜிகரன் (ஆசிரியர் – யா/வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்)
5. க.சுத்தானந்தன் (ஆசிரியர் – வவு/ஓமந்தை மத்திய கல்லூரி)
6. ப.கஜமுகன் (ஆசிரியர் –வவு/சின்னடம்பன் பாரதி வித்தியாலயம்)
7. பா.பகீர்பரன் (ஆசிரியர் – மன்/வெள்ளாங்குளம் ம.வி)
8. பா.கார்த்தீபன் (ஆசிரியர் – மு/புதுக்குடியிருப்பு ம.ம.கல்லூரி)
9. அ.நிரோசன் (ஆசிரியர் – மு/முல்லைத்தீவு ம.வி)
10. எஸ்.கஜலக்சன் (மாணவர் – யா/மகாஜனக்கல்லூரி)
11. எஸ்.பிரசாந்த் (மாணவர் – யா/மகாஜனக்கல்லூரி)

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி நூலகம்
Jaffna Central College Library
11932

# நவீன அடிமைகள்

## கயிலை. திலகநாதன்

'நாடகக் கலை உலகக்கலைகளுள் முதன்மையானது. அழகியல், கல்வி, சமூகம் சார்ந்த உயிர்ப்பான செயலாற்றுகைக்கு நாடக அரங்கச் செயற்பாடுகள் இன்று பெரிதும் பயன்படுகின்றன. ஒடுக்கப்பட்ட மக்களின் சமூக விடுதலைக்கான அரங்காக நாடகக் கலை விருத்தியடைந்து வருகிறது. இந்த விருத்திகளை பரிசோதித்து புத்தாக்கங்களை பலபரிமாணங்களில் உருவாக்கி வரும் நாடகத்-துறை விரிவுரையாளரான இவர் பல நூல்களை வெளியிட்டு, நடிப்பித்துக்காட்டி, முகிழ்நிலை ஆசிரியர்களை சிறந்த நல்லாசிரியர்களாக உருவாக்கி வருபவர். நாடகத்துறை சார் கலைத்திட்ட உருவாக்கம் புத்தாக்கங்கள் விழிப்புணர்வுகள், பரிசோதனைகள் விமர்சனங்கள் என பல்துறை ஆற்றலுடையவராக மிளிர்கிறார்.

– கலாநிதி பா. தனபாலன்

க.திலகநாதன் எனது நீண்டகால நண்பர். யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்தில் நாடகமும் அரங்கக் கலைகளும் சிறப்புக் கற்கையில் சகபாடி. பேராசிரியர் கா.சிவத்தம்பியின் வழிகாட்டலில் இவர் செய்த அரங்கியல் ஆய்வு 'கோயில் அரங்க மரபு' என்ற நூலாகவும் பேராசிரியர் சி.மௌனகுரு வழிகாட்டலில் 'அரங்கக்கட்டு மாணம்' என்ற ஆய்வுத் தளங்களில் மட்டுமன்றி திலகநாதனின் பங்களிப்பு நாடகமும் அரங்கக் கலைகளும் கற்கைநெறியின் கற்றல் கற்பித்தல் தொடர்பான நிலைபேற்றிற்கு கடந்த 20 ஆண்டுகளாக பங்காற்றியுள்ளார். தொடர்ந்தும் பங்காற்ற வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

– திருமதி நவதர்ஷினி கருணாகரன்



கயிலை.திலகநாதன்: யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நாடகமும் அரங்கியலும் பாடத்தைச் சிறப்புப் பாடநெறியாகப் பயின்று அதில் இளங்கலைமாணிச் சிறப்புப் பட்டம் பெற்றவர். கிழக்குப் பல்கலைக்-கழகத்தின் நாடகமும் அரங்கியலும் துறையில் முதுதத்துவமாணிப் பட்டம் பெற்றவர். அத்துடன் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் ஆசிரியர் கல்வியில் முதுகலை மாணிப்பட்டத்தைப் பெற்றவர். தற்போது யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் நாடகமும் அரங்கியலும் துறையில் விரிவுரையாளராகப் பணியாற்றி வருகின்றார்.



ஜனனி வெளியீட்டகம்
விடயம் : நாடகமும் அரங்கியலும்

9789557726038

200/-